
# யாழ் நாதம்

இதழ் 8

2002



யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கக்
கொழும்புக் கிளையின் வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஒன்று கூடல் நிகழ்வில் ...

எங்கள் கல்லூரிப் பழைய ஆசிரியை திருமதி லீலா நாகரத்தினம் அவர்கள் பிரதம அதிதியாக வருகை தந்த ஏசியன் இன்ரநாஷனல் பாடசாலை அதிபர் திருமதி கூல்பாய் குணசேகரா அவர்களை அன்புடன் அணைத்து முத்தம் இட்டு வரவேற்கின்றார்.



*இடம் இருந்து வலம் :* செயலாளர் திருமதி சிவகாமி அம்பலவாணர், தலைவி செல்வி சற்சொரூபவதி நாதன், பிரதம அதிதி திருமதி கூல்பாய் குணசேகரா, பொருளாளர் திருமதி அபிராமி கயிலாசபிள்ளை ஆகியோர் அமர்ந்து இருக்கின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் நாதம்

யாழ் இந்து மகளிர் கல்லூரி
பழைய மாணவிகள் சங்கக்
கொழும்புக் கிளையின்
வெளியீடு

இதழ் 8 2002

பொருளடக்கம்.

2 கல்வி - கலை ஆர்வம்

3 செய்தி

4 முன்னேச்சரப் பிரயாணம்

11 எண்கள் பிறந்த விதம்

14 சுற்றுச் சூழல் பாதுகாப்பில் நகரக் காடுகளின் பங்களிப்பு

18 ஆடிப்பிறப்பு

19 ஆடிப்பிறப்பு - பாட்டு

20 தங்கத் தாத்தா

21 பரத நாட்டியத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

24 துளசியின் சிறப்பு

26 குரு தட்சணை

28 சைவ கேக்

29 இந்துவா சைவமா?

30 யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம் கொழும்பு - எட்டாம் ஆண்டு அறிக்கை

37 ஆன்மீகம் அறிவுறுத்தும் பெண்களின் கடமைகள்

40 Peace

41 நியூசிலாந்தில் இந்து திருமணம்

46 எங்கே நிம்மதி

45 Global Balance for Peace

48 திருக்கேதீச்சரம்

59 சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம் - திருக்கேதீச்சரப் பதிகம்

62 கன்பரா தமிழ்ச்சங்கம்

64 யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி - கலை ஆர்வம்

எங்கள் கல்லூரி மாணவிகள் கல்வியிலும் நுண்கலைகளிலும் சிறந்து விளங்குவது எங்களுக்கு மகிழ்ச்சியையும் பெருமையையும் தருகின்றது.

எங்கள் கல்லூரி மாணவியாகிய செல்வி காயத்திரி சிற்சபேசன் 2000ஆம் ஆண்டு க. பொ. த. (சாதாரணப்) பரீட்சையில் 10 D எடுத்துள்ளார். இவர் வட - கீழ் பிராந்திய பாடசாலைகளின் பழைய மாணவர் சம்மேளனம் 2001ஆம் ஆண்டு எமது பாடசாலையின் சிறந்த மாணவி ஒருவருக்கு அளித்த பொன் விருதைப் பெற்றுள்ளார்.

இன்னொரு மாணவியாகிய செல்வி சாரூபா சரவணபவான் வரைந்த ஓவியம் ஒன்று வெளி அட்டையை அலங்கரிக்கின்றது. இந்த ஓவியத்திற்கு வலயமட்டப் போட்டியில் இரண்டாம் இடம் கிடைத்துள்ளது. இவர் 1999ஆம் ஆண்டு இலங்கை வங்கியினால் நடாத்தப்பட்ட ஓவியப்போட்டியில் ஜனாதிபதிப் பரிசைப் பெற்றுள்ளார். இவர் ஓவியம் வரைவதில் மிகுந்த ஆற்றல் உள்ளவர்.

எங்கள் கல்லூரி மாணவ மணிகளின் கல்வியும் கலை ஆர்வமும் வளர வாழ்த்துகின்றோம்.

இந்த ஆண்டு எங்கள் சங்கத்தில் சேர்ந்துள்ள செல்வி சர்மிளா சொர்ணலிங்கம், செல்வி சங்கீதா விபுலஸ்காந்தா ஆகிய ஊக்கமுள்ள இரு இளம் அங்கத்தவர்களை வரவேற்கின்றோம்.

என்றும் போல இந்த மலருக்கும் வெளியுறை செய்து சீராக்கித் தந்த யூனி ஆட்ஸ் நிறுவனத்திற்கும் அதன் உரிமையாளர் திரு. பொ. விமலேந்திரன் அவர்கட்கும் நன்றி நவில்கின்றோம்.

| | |
|---|---|
| 61/2, Abdul Gaffoor Mawatha<br>Colombo 3 | திருமதி சிவகாமி அம்பலவாணர்<br>ஆசிரியர் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செய்தி

யாழ் நாதம் இவ்வாண்டும் இதழ் விரிக்கின்றது. இன்றைய யுகத்தில் எழுத்தாற்றலை வளர்த்துக் கொள்ள ஆர்வம் காண்பிப்பவர்கள் சிலராகவே உள்ளனர். மொழி அறிவு, கற்பனைத் திறன், அறிவாற்றல் இவற்றின் வளர்ச்சிக்கு எழுத்துக்கலை சிறந்த பங்காற்றுகிறது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

தொலைபேசி, இ–மெயில் இவை மூலம் செய்தி சொல்லும் காலம் என்பதால் எமது இளம் சந்ததியினருக்கு கடிதம் எழுதும் பழக்கமே இல்லாமல் போய்விட்டது. தந்திப் பாஷையில் கருத்துப் பரிமாற்றம் செய்யவே விரும்புகின்றனர்.

இந் நிலை மாறுவதற்கு ஒரு வடிகாலாக யாழ் நாதம் விளங்க வேண்டும் என்பது எமது அவா. எமது இளம் அங்கத்தவர்கள் இந்த எமது அவாவைப் பூர்த்தி செய்வதற்குப் போதிய அக்கறை காண்பிக்காதமை மன வருத்தத்தை அளிக்கிறது.

இனிவரும் காலத்திலாவது தமது எழுத்தாற்றலைக் காண்பித்து நல்ல விடயங்களை யாழ் நாதத்தில் பிரசுரிக்க அவர்கள் ஆர்வம் காண்பிக்க வேண்டும்.

எழுத்தாற்றலை ஊக்குவிக்கும் விடயத்தில் ஏமாற்றம் இருப்பினும், இந்த யாழ் நாதத்தை ஆசிரியர் சிவகாமி, ஒரு ஆவணப் பொக்கிஷமாக எமது மன்ற நடவடிக்கைகளின் பதிவேடாக சிறந்த முறையில் வெளியிட்டு வருவது எமக்கு ஆறுதல் தருகிறது.

யாழ் நாதம் மேலும் ஓங்கி ஒலிக்க இறையருளை யாசிக்கின்றேன்

செல்வி. சற்சொரூபவதி நாதன்
தலைவி
யாழ் இந்து மகளிர் பழைய மாணவிகள் சங்கம்
கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னேச்சரப் பிரயாணம்

திகதி : 2002-06-29

- பிரயாண ஆரம்பம்:- பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபம்
முன்பாக காலை 7.00மணிக்கு.

- வடிவாம்பிகா சமேத முன்னைநாதர் கோவில், சிலாபம் மு.ப 10.30 மணி ஆலயதரிசனமும், அபிசேகத்திற்கான பதிவும்.

- விஷ்ணு கோவில் மற்றும் கேணி மு.ப 11.00 மணி.

- பத்திரகாளியம்மன் கோவில் மு.ப 11.15 மணி.

- மீண்டும் முன்னைநாதர் தரிசனம் தலபுராணம் அபிசேகமும். மதிய பூசையும் மதியம் 12.00 மணி. மதிய உணவு பி.ப 1.00 மணிக்கு.

- உடப்பு நோக்கிய பிரயாணம் பி.ப 2.00 மணி.

- கடற்கரையோர பார்த்தசாரதி (விஷ்ணு) திரௌபதி அம்மன் கோவில் பி.ப 4.45 மணி.

- பிரயாண முடிவு:- பம்பலப்பிட்டி மாணிக்க விநாயகர் ஆலயமுன்பாக இரவு 8.30 மணிக்கு.

**ஆரம்பம்** :- யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம் - கொழும்புக்கிளை ஒழுங்குபடுத்திய முன்னேச்சரப் பிரயாணம் யூன் மாதம் 29ஆம் திகதி காலை 7.00 மணிக்கு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்திலிருந்து ஆரம்பித்தது. வாடகை பேருந்து வண்டியில் அங்கத்தவர் மற்றும் அவர்களின் குடும்பத்தினருடன் சேர்ந்து மொத்தம் 29 பேர் முன்னேச்சரம் நோக்கி பயணப்பட்டோம். ருப்ளிகேஷன் வீதியூடாக யூனியன் பிளேஸ், மருதானை ஆகிய இடங்களை கடந்து விரைந்த பேருந்து களனிப் பாலத்தை கடக்கும் போது நேரம் 8.00 மணியாகிக் கொண்டிருந்தது. வத்தளையை அண்மித்தவுடன் அங்கு ஒரு உறுப்பினரை ஏற்றிக் கொண்டு கட்டுநாயக்க விரைவுப்பாதையூடாக சிலாபம் நோக்கி பேருந்து வேகமெடுத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈரக்காலநிலை நிலவும் கொழும்புப் பிரதேசத்திற்கும், வரண்ட காலநிலை நிலவும் புத்தளம் மற்றும் சிலாபம் பிரதேசத்திற்கும் இடையிலான பாரிய வேறுபாட்டை அங்கு பரவிக் காணப்பட்ட தாவர இனங்களிலிருந்து அறிய முடிந்தது. ஆரம்பத்தில் காணப்பட்ட பசுமையான காட்சி புத்தளத்தை நெருங்கிய போது குறைவடைந்து செல்வதை அவதானிக்க முடிந்தது. புற்றரைகள் கூட வரண்டு காணப்பட்டன. வேம்பு, பூவரசு, அக்கேசியா, கிளிசிரிடியா இன்ன பிற மரங்கள் அங்கு நாளாந்த வாழ்க்கைக்கு இன்றியமையாதன. கடற்கரையை அண்டிய பிரதேசமாகையால் காற்றுக்குக் குறைவில்லை. இருந்த போதிலும் சூழலில் நிலவிய வெப்பத்தை உணர்ந்து கொள்ள முடிந்தது.

இங்கு வாழும் மக்கள் காலநிலையுடன் போட்டி போட்டுக் கொண்டு வாழ்கின்றனர். உலகில் இத்தகைய கஷ்டப் பிரதேசங்களில் வாழும் மக்கள், ஏனைய பிரதேசங்களில் வாழும் மக்களை விட ஒப்பீட்டுரீதியில் மனோவலிமை கூடியவர்கள் என்று படிப்பித்த சமூகவியல் ஆசிரியையின் ஞாபகம் இந்த மக்களைப் பார்க்கும் போது ஏற்பட்டது.

ஈழத்தின் ஐந்து ஈச்சரங்களில் ஒன்றான முன்னேச்சரத்தை நாங்கள் அடைந்த போது நேரம் மு.ப 10.30 ஆகி விட்டது.

**தல வரலாறு** :- இலங்கையில் வாழுகின்ற இந்து மற்றும் பௌத்த மக்கள் மிகுந்த பக்தியுடனும், நம்பிக்கையுடனும் வழிபடும் பொதுத்தலங்களுள் முன்னேச்சரமும் ஒன்றாகும். காலத்தால் முந்திய ஈச்சரமாக கணிக்கப் படுவதால் இவ்வாலயம் முன்னேச்சரம் என்று அழைக்கப்படுகிறது.

சிலாபத்திலிருந்து கிழக்கே 2 மைல் தொலைவில் இவ்வாலயம் அமைந்துள்ளது. வடிவாம்பிகா சமேத முன்னைநாதப் பெருமான் எழுந்தருளியிருக்கும் இவ்வாலயமானது **மூர்த்தி, தலம், தீர்த்தம்** மூன்றும் ஒருங்கே அமையப்பெற்ற சிவாலயமாகத் திகழ்கிறது. **தீர்த்தம் – மாயவன் ஆறு. தலவிருட்சம் – அரசமரம்.**

கர்ண பரம்பரைக் கதையின் படி இவ்வாலயம் சூழலில் வாழ்ந்த செம்படவனொருவன் கைப்பற்றிய பொன்னிற விக்கிரகத்தின் அடிப்படையில் அரசனால் ஆகமவிதிப்படி ஆலயம் அமைக்கப் பட்டதாக கூறப்படுகிறது.

போர்த்துக்கேயரின் வருகையால் பல இந்துக் கோவில்கள் தகர்க்கப்பட்டன. அவற்றுள் முன்னேச்சர ஆலயமும் ஒன்று. இக்கோவில் 1578இல் உடைக்கப்பட்டதாக குறிப்புகள் தெரிவிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளக்கோட்டு மன்னனும், 6ஆம், 9ஆம், பராக்கிரமபாகு மன்னர்களும் செய்த திருப்பணிகளால் கோவில் சிறப்புப் பெற்று விளங்குகிறது. கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கனால் புனருத்தாரணம் செய்யப் பட்டதாக சரித்திரச் சான்றுகள் தெரிவிக்கின்றன.

கலையம்சங்களுடன் கூடிய சிற்பங்கள் இவ்வாலயத்தின் சிறப்புகளில் முக்கியமானதாகும். இங்கு காணப்படும் விநாயகர், சுப்பிரமணியர், நடராஜர் போன்ற விக்கிரகங்கள் ஆலயத்தை அண்மித்துள்ள கிணற்றிலிருந்து கண்டெடுத்ததாக சொல்லப்படுகிறது.

இங்கு ஆறுகால நித்திய பூசைகள் நடைபெறுகின்றன. பங்குனி உத்தரமும், பூரணையும் கூடிய தீர்த்தத் திருவிழாவாக 10 நாட்களைக் கொண்ட வடிவாம்பிகையம்மன் திருவிழாவும், ஆவணிமாத பௌர்ணமிக்கு தீர்த்தோற்சவத்தை இறுதியாகக் கொண்ட 27 நாள் திருவிழா முன்னைநாதருக்குமாக வருடத்தில் இரு திருவிழாக்களையும் கொண்டுள்ள ஆலயம் முன்னேச்சரமாகும்.

சிவராத்திரிக்கு திருக்கேதீச்சரம் போல நவராத்திரி என்றதும் நினைவில் வருவது முன்னேச்சர ஆலயமே. நவராத்திரி தினத்தில் தினமும் காலையில் 108 சங்குகளைக் கொண்டு நடக்கும் சங்காபிஷேகம் சிறப்பானது.

முன்னேச்சர ஆலயச் சூழலில் கோவிலின் தெற்கே சித்தி விநாயகர் ஆலயம், வடமேற்கே ஐயனார் கோவில், வடக்கே பத்திரகாளியம்மன் கோவில் என பல கோவில்கள் அமைந்துள்ளன. இங்கு சகல இன மக்களும் கலந்து கொள்ளும் இறைவழிபாடு ஒற்றுமை உணர்வுக்குப் பாலமாக அமைகிறது.

**தற்போதைய சூழல்** :- வடிவாம்பிகா சமேத முன்னைநாதரை தரிசித்து விட்டு இரண்டு கும்ப அபிசேகத்துக்கு பதிந்தோம். கோவிலின் சுற்றுப் பிரகாரத்தில் எழுந்தருளி மூர்த்திகளை தரிசித்து வந்த போது ஒரு மாற்றத்தை அவதானிக்க முடிந்தது. முன்பு சுற்றுப்பிரகார சுவர் நீளத்திற்கு எழுந்தருளியிருந்த 63 நாயன்மார்களின் சிலைகள் இப்போது ஓர் சிறிய அறைக்குள் வைத்துப் பூட்டப்பட்டிருந்தன. 63 நாயன்மார்களின் மூர்த்தங்கள் இக்கோயிலின் தனிச்சிறப்பு. அவற்றை வரிசைப்படுத்தி, விளக்கங்களுடன் வைத்தால் அதைப்பார்க்கும் சைவச் சிறார்களின் உள்ளத்தில் ஓரளவுக்கு சமய அறிவு வளர இடமுண்டு.

புனருத்தாரணப் பணிகளை வேண்டி நிற்கும் இன்றைய காலகட்டத்திலும், கோவிலில் நிலவிய அமைதியும், புனிதமும் மனத்திற்கு நிறைவாக இருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து கோவிலின் தெற்குப் புறத்தில் கட்டப்பட்டுக் கொண்டிருந்த விஷ்ணு கோவிலுக்கு சென்று பார்த்தோம். அருகிலேயே சுவாமியை பாலஸ்தாபனம் செய்து வைத்திருந்தார்கள். அங்கு வழிபாட்டை முடித்துக் கொண்டு, முன்னேச்சரக் கோவிலின் கோபுர வாயிலுக்கு எதிரே அமைந்துள்ள கேணியைச் சென்று பார்வையிட்டோம். அதன் நிலைமை பெரிதும் கவலைக்கிடமாக இருந்தது. பராமரிப்பின்றி இருந்ததோடு, கேணிக்குள் குப்பை கூளங்களை சேர விட்டிருக்கின்றனர். இங்கும், அங்குமாக மாசடைந்த நீர்ப்பகுதி வெளியே தெரிந்தது. கேணிக்கும் கோவிலுக்கும் இடையில் கேணியையொட்டி அமைந்துள்ள அரசமரத்தை சுற்றி வேலியடைத்து அங்கு விகாரையொன்றின் ஆரம்பநிலைக் கட்டுமானங்கள் எழுப்பப்பட்டுக் கொண்டிருந்தன. பிற்காலத்தில் இவ்விகாரையும் பெரியளவில் விருத்தி செய்யப்படக் கூடும்.

அடுத்து கோவிலின் வடக்குப் புறத்தில் அமைந்துள்ள பத்திரகாளியம்மன் கோவிலைத் தரிசிப்பதற்காக கால் நடையாகப் புறப்பட்டோம். முப 11.00 மணி மதிய வெயிலின் கொடுமை தாள முடியாததாக இருந்த போதிலும், அம்மனைத் தரிசிக்கும் ஆவலில் யாருக்குமே வெயிலைப் பற்றிய சிந்தனை இருந்ததாக தெரியவில்லை. தலையில் முக்காடிட்டுக் கொண்டு, வழிவழியே இருந்த கடைகளைப் பார்வையிட்டுக் கொண்டு போனோம். நல்லூர்க் கந்தசுவாமி கோவில் திருவிழாவிலே, சுவாமியை கும்பிட்டேன் என்று பேர் பண்ணிவிட்டு, கடைவீதி வழியே உலாவிய அந்த நாள் ஞாபகம் ஏற்பட்டது. சுவாமி படங்கள் மற்றும் விதம் விதமான சிறிய அலங்காரப் பொருட்கள், மட்பாத்திரங்கள் என்று ஏராளமான இருந்தன. எல்லாமே குடிசைக் கைத்தொழிலின் விளைவு பொருட்கள்.

இவற்றிலிருந்து இம்மக்களின் வாழ்க்கைத் தரத்தை இவர்கள் எதிர் நோக்கும் பொருளாதார சிக்கல்களை விளங்கிக் கொள்ள முடியும். பெரும்பாலான வீடுகளின் அமைப்பு முறைகள் மிகவும் பின் தங்கிக் காணப்பட்டபோதும், ஒரு சில வீடுகள் மிகவும் அழகாக அமைக்கப் பட்டிருந்தன. பாடசாலைப் பிள்ளைகளில் வயதுக்குரிய வளர்ச்சி காணப்படவில்லை. அவர்களின் முகங்களில் சூது வாதற்ற அறியாமையை அவதானிக்க முடிந்தது.

கொழும்பிலுள்ள சிறுவர்களுக்கும், இவர்களுக்குமிடையே மலைக்கும் மடுவுக்குமிடையிலான வித்தியாசம். இதைச் சீர்படுத்துவதற்கு நீண்டகால முயற்சி தேவைப்படும். வாழ்க்கையின் அடிப்படை விடயங்களில் மாற்றங்களும், முன்னேற்றங்களும் ஏற்படாவிட்டால் இது பிரயோசனப்படாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரகாளி அம்மன் கோவில் வித்தியாசமான முறையில் கட்டப்பட்டிருந்தது. சூழவுள்ள பகுதியை விட ஏறத்தாழ 2-3 அடி உயரத்தில் படிகளுடன் கூடிய ஒரு மண்டபம் போல காணப்பட்டது. திறந்த வெளிக் கோவிலாகையால் சூழவுள்ள பகுதிகளை கோவில் மண்டபத்திலிருந்து கொண்டே அவதானிக்க முடிந்தது. அமைப்பு முறை வித்தியாசமாக இருந்த போதிலும் மிகவும் அழகாக இருந்தது.

இங்கு வரும் பக்தர்கள் சிலர் தெய்வ காணிக்கையாக கோழிகளை அர்ச்சகரிடம் கொடுக்க, அவர் அதை வாங்கி அருகிலுள்ள மேசையின் கீழ்ப்புறத்தில் விட்டார். கோவிலின் வளவில் கோழிகள், ஆடுகளுடன் சில மாடுகளும் உலாவித் திரிந்தன. பூசை முடிந்து வருவோர் தங்களிடம் உள்ள பழங்களை அவற்றிடம் கொடுக்க, ஆவலாகத் தின்று தீர்த்த அந்த பிராணிகளைப் பார்க்கும் போது பரிதாபமாக இருந்தது. கோவில் சூழலில் அவை வளர்க்கப்படும் நோக்கம் பிராணி வளர்ப்பு மட்டுமா?. அல்லது அங்கு பலி பூசைகளும் இடம் பெறுமா? என்ற கேள்வி மனத்தில் எழுந்தது. விசாரித்த போது ஆடுகளைப் பலியிடுவதுண்டு என அறிந்தோம்.

இப்படிப்பட்ட வழக்கங்களை ஆறுமுகநாவலர் ஒழித்து விட்ட பிறகும் தொடர்வது வேதனைக்குரியது. கடவுளின் பெயரால் நடந்தாலும் பிராணி வதை இல்லாமல் போய் விடுமா?. அம்மனை தரிசித்த அமைதியை இந்தவிடயம் சிறிது அசைத்து விட்டது. கோவில் சுற்றாடலில் மயில்கள் சில உலாவின வரும் வழியில் சில கைரேகை ஜோசியக்காரர்களைப் பார்த்தோம்.

மதிய பூசை நேரம் நெருங்கி விடவே வேகவேகமாக மீண்டும் முன்னைநாதரை நோக்கி நடையைக் கட்டினோம். கோவிலில் பூசை, அபிசேகம் செய்வதற்கு முன் சிறிது நேரம் அர்ச்சகர் தலபுராணம் கூறினார்.

பின்னர் முறையே கும்ப பூசையும், பால்,பழம், இளநீர், பூ, தீர்த்தம் என முன்னைநாதருக்கு அபிசேகம் நடந்தது. அம்மன் சந்நிதிக்கும், முன்னைநாதர் கர்ப்பக் கிரகத்துக்குமாக மாறிமாறி அபிசேகமும், தீபாராதனையும், பூசையும் நடைபெற்றது. இவ்வாறு ஏறத்தாழ அரைமணி நேரம் ஆனந்தமாக சுவாமி தரிசனம் செய்தோம்.

பின்னர் பிரசாதம், பஞ்சாமிர்தம் வாங்கிக் கொண்டு மதிய உணவுக்கு ஏற்பாடு செய்திருந்த அர்ச்சகர் வீட்டில் போய் முகாமிட்டோம். நாமிருந்த களைப்புக்கு அந்த உணவு மிகவும் நன்றாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உடப்பு நோக்கி :-** மதிய உணவு முடித்த பின்னர் பி.ப 2.00 மணியளவில் புத்தளம் – சிலாபம் பாதையூடாக உடப்பு நோக்கி பயணப்பட்டோம். கூடுதலாக பூவரசு, வேம்பு மற்றும் அக்கேசியா மரங்களை இங்கு அவதானிக்க முடிந்தது. பாதையின் இருமருங்கிலும் இறால் வளர்ப்புப் பண்ணைகள் அமைந்திருந்தன. மிகவும் இலாபகரமான தொழிலாயினும், நட்டத்திற்கான நிகழ்வும் அதிகமாகும். மேலும், இத்தொழில் தரைக்கீழ் நீரின் தரம், சேமிப்பு, மற்றும் வடிகாலமைப்புச் செற்பாடுகளில் பாதிப்பை ஏற்படுத் துவதனூடாக விவசாயத்துக்கான சாத்தியப்பாட்டைக் குறைக்கும். இது பாரிய சுற்றுச்சூழல் பாதிப்பை ஏற்படுத்தும் விடயமாயினும், பொருளாதார ஸ்திரமற்ற சமூகத்தில் இப்பேச்சு எடுபடாது.

இப்பிரதேச மற்றும் மக்களின் வாழ்க்கை முறையையும், அவர்களின் வீடுகளின் அமைப்பையும் பார்க்கும் போது யாழ்ப்பாணத்தின் நாவாந்துறை, பாஷையூர் மற்றும் குருநகர் பிரதேசங்களில் இருப்பது போன்ற உணர்வு ஏற்பட்டது. வறுமை மக்களின் உடலில் தென்பட்ட போதிலும், முகங்களில் வாழ்க்கையின் சோர்வு தெரியவில்லை.

இன்னும் சிறிது தொலைவு உள்ளே சென்ற போது கட்டைக்காடு என்ற பிரதேசம்வந்தது. சாவகச்சேரி, கச்சாய் மற்றும் கொடிகாமம், வரணி போன்ற ஊர்களின் நினைவு எழுந்தது.ஒரே மணற்காடான தோற்றம். இங்கும் மண்வெட்டி விற்பதுண்டு போலும். குவியல் குவியலாக வெட்டுப்பட்ட தோற்றத்துடன் மண்குன்றுகள் காணப்பட்டன. உடனடியாக அபாயம் தெரியா விட்டாலும், பின்னாளில் மண்ணரிப்பு அபாயம் பாரியளவில் தாக்க இடமுண்டு. இங்குள்ள சுற்றுச் சூழல் அதிகாரி இவற்றைக் கவனிப்பதில்லையா அல்லது மத்திய சுற்றுச் சூழல் அதிகார சபை இன்னும் தனது அதிகாரியை இங்கு நியமிக்க வில்லையா? என்று தெரியவில்லை.

ஐந்து அம்மன் கோவில்களைப் பார்ப்பதற்காக சிறிது தொலைவு உள்ளே சென்றோம். பாதை சரியாக தெரியாதபடியால் பாதியில் திரும்பி வந்தோம். வரும் வழியில் முருகக்கடவுள், வைரவசுவாமி, இரும்பன் போன்ற சில சிறிய கோவில்களையும், காளியம்மன், முத்துமாரி அம்மன் கோவில்களையும் தரிசிக்க முடிந்தது. ஆயினும் பூசை நேரமல்லாதபடியால் அவை பூட்டியிருந்தன.

உடப்பில் கடல் சூழ்ந்த மணற்பிரதேசத்தில் ருக்குமணி, சத்தியபாமா சமேதரக பார்த்தசாரதி எழுந்தருளி உள்ளார். இக்கோவிலின் உள்ளே திரௌபதை அம்மன் வீற்றிருக்கின்றார். இக்கோவிலின் நவக்கிரகம் வித்தியாசமான முறையில் அமைக்கப் பட்டிருந்தது. எல்லாக் கிரகங்களும், மத்தியில் அமைந்துள்ள சூரியனைப் பார்த்த வண்ணம் அமைக்கப்பட்டிருந்தன. அருகேயிருந்த அர்ச்சகரிடம் விசாரித்த போது இவ்வமைப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாபாரதத்தை அடிபொற்றிய ஆகம முறையாகும் என்று குறிப்பிட்டார்

இக்கோவில் ஓவியச் சிறப்புடன் கூடிய கலைக்கோவிலாக அமைந்துள்ளது. ஆலயச்சுற்றுச் சுவரில் அப்போதும் ஓவியம் தீட்டும் பணி இடம் பெற்றுக் கொண்டிருந்தது. கண்ணனின் சிறு வயது லீலைகள், மகாபாரத சம்பவங்கள் என்பனவற்றை அங்கு ஓவியத்தில் காண முடிந்தது.

**வீடு நோக்கி :-** பின்னர் கட்டுநாயக்கா விரைவுப் பாதையூடாக கொழும்பு நோக்கி விரைந்த பேருந்து இடையில் எங்கும் தங்காமல் நகருக்குள் பிரவேசித்து. பம்பலப்பிட்டி மாணிக்க விநாயகர் ஆலயம் முன்பாக அனைவரையும் இறக்கி விட்டபோது நேரம் இரவு 8.30 மணியாகி விட்டது.

தலயாத்திரை செய்த மனத்திருப்தியுடனும். அடுத்து எங்கு பிரயாணத்தை திட்டமிடலாம் என்ற சிந்தனையுடனும். அனைவரும் வீடு நோக்கிப் பயணப்பட்டோம்.

செல்வி. ஷர்மிலா சொர்ணலிங்கம்
பழைய மாணவி (1990)
அபிவிருத்தி உதவியாளர்
திட்டமிடல் பிரிவு
நிர்ப்பாசன. நீர்முகாமைத்துவ அமைச்சு
கொழும்பு – 10.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்கள் பிறந்த விதம்

எண்கள் என்றதும் நாம் சர்வசாதாரணமாக எண்ணி விடுகிறோம், அரிவரி படிக்கும் குழந்தை கூட ஒன்று தொடக்கம் பத்துவரை சுலபமாக எண்ணிக் காண்பிக்கும். சிறிது வளர்ந்த பிள்ளைகள் எண்களை வைத்து தமக்குள் பந்தயம் பிடிக்கும் போது கேட்கச் சுவையாக இருக்கும். பத்து, நூறு, ஆயிரம் அதன் பின் தொடர்ந்தும் ஆயிரம் ஆயிரம் என்று திரும்பத் திரும்பக் கூறுவார்கள். இதிலிருந்து அவர்களுக்குத் தெரிந்த ஆகக்கூடிய தொகை ஆயிரம் என்று ஊகிக்கலாம்.

ஆனால் ஒரு நூற்றாண்டுக்கு முன்னதாக மத்திய ஆபிரிக்காவில் வாழ்ந்த வொட்டென்டொட்ஸ் (Wottentots) என்ற வகுப்பினருக்கு எண்ணத் தெரிந்த ஆகக் கூடிய எண்கள் இரண்டுதானாம். ஒன்று, இரண்டு அதற்குக் கூடிய எல்லாமே 'பல' இப்படித்தான் அவர்கள் கொண்டார்கள். இதிலிருந்து புராதன மக்களுக்கு எண்கள் பற்றித் தெரிந்திருக்கவில்லை என்பது புலனாகிறது. அவ்வாறாயின், இன்று வழக்கில் உள்ள எண்கள் எப்பொழுது தோன்றின? ஒருவேளை ஒரு முனிவர் காலையில் எழுந்து எல்லா எண்களையும் மளமளவென்று எழுதிக் கொடுத்தாரா? இல்லவே இல்லை பல ஆண்டுகளாக மக்கள் தமது அன்றாட வாழ்க்கையின் தேவைகளை ஒட்டியே எண்களின் அவசியத்தை உணர்ந்து படிப்படியாக அவற்றுக்கு உருக் கொடுத்தார்கள். பின்னர் இவை சீர்பெற்று இன்று வழக்கில் உள்ள நிலைக்குப் பரிணமித்தன.

விரல்களால் – புராதன மக்கள் தமது இரு கைகளிலுமுள்ள விரல்களின் தொகையான பத்து வரைக்கும் முதலில் எண்ணினார்கள். சிலர் கால் விரல்களையும் சேர்த்து 20 வரைக்கும் எண்ணினார்கள். இது சுலபமான முறை என்று இன்றும் குழந்தைகள் எண்ணுகிறார்கள் புராதன மக்கள் இதற்கும் ஒரு விதிமுறை வகுத்திருந்தனர். ஸுனி இந்தியர்கள் இடது கையின் சின்ன விரலில் இருந்து எண்ணத் தொடங்கினர். தென் அமெரிக்காவில் வாழ்ந்த ஒட்டோமக்குவர் (Otomaus) சரட்டை விரலில் இருந்து எண்ணுவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகரிகம் வரை மக்கள் விரல்களை விட்டு விட்டு, சிறு குச்சிகளையும், கூழாங்கற்களையும், சிப்பிகளையும் பயன் படுத்தத் தொடங்கினர். வேறுசிலர் தடிகளில் வெட்டு அடையாளங்கள் போடுவது, கயிறுகளில் முடிச்சுப் போடுவது பின்னர் அவற்றைப் பயன்படுத்தி எண்ண முற்பட்டார்கள்.

எண்களில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட புராதன எழுத்து வடிவங்கள் எகிப்திய, மெசப்பொட்டேனிய மக்கள் கி . மு 300 இல் எழுதியவையே அவர்கள் எழுதிய 1, 2, 3 போன்ற தானங்கள் குகை மனிதர்களின் வெட்டு அடையாளங்களை ஒத்திருந்தன. உலகின் பல்வேறு திக்குகளில் வாழ்ந்த எகிப்தியர்கள், உரோமர்கள், சீனர்கள், இந்துக்கள் எல்லோருமே ஒன்று என்ற எண்ணுக்கு கொடுத்த வடிவம் ஒரு தனிக் கீறுதான். மனிதனின் அடிப்படை ஒற்றுமையை இது காண்பிக்கிறதல்லவா?

பண்டைக்கால எகிப்தியர்கள், தமது எண்களை பப்பிரஸ் **(Papyras)** என்ற கடுதாசியில் எழுதினர். அத்துடன் தமது சட்டி, பானைகளிலும் செதுக்கினர். சுமேரியர், பபிலோனிய மக்களுக்கு களிமண்ணால் செய்த தகடுகளில் எண்களைப் பொறிக்கும் முறையைப் பயிற்றுவித்தனர். புராதன சீனர் மையையும் மூங்கில் தூரிகையையும் கொண்டு சீலைகளில் தமது எண்களைத் தீட்டினார்கள். மேற்குலகில் மாயா மக்கள் புள்ளிகள், சிறு கீறுகள் நீள வட்டங்கள் என்று மூவித வடிவங்களை மாறி, மாறிப் பயன்படுத்தி எண்களைவரைந்தனர்.

**பெரிய எண்கள்** :- பெருந்தொகைகளைக் குறிக்க தமது வழக்கமான முறைகள் பயன்படா என்பதை மக்கள் உணரத் தொடங்கினர். இதனால் பண்டைக்கால எகிப்தியர்களும், பபிலோனியர்களும், சீனர்களும், கிரேக்கர்களும் பெருந் தொகைகளைக் குறிக்க தனித்தனிக் குறியீடுகளை வைத்திருந்தார்கள். உதாரணமாக எகிப்தியர்கள் நூறுக்கு ஒரு தனிச் குறியீட்டையும், 1000க்கு பிறிதொரு குறியீட்டையும் எழுதினர். பபிலோனிய மக்கள் 60 ஐ அடியாகக் கொண்டார்கள். 50 ஐக் குறிக்கும்போது 60 – 10 என்று எழுதினார்கள். இதன் அடிப்படையிலேயே ஒரு மணித்தியாலம் இன்றும் 60 நிமிடங்களாகவும் ஒரு நிமிடம் 60 செக்கன்ட்களாகவும் பிரிக்கப்படும் முறை காணப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பூச்சியத்தின் பிறப்பு** :- இன்று ஆங்கிலத்தில் சீறோ ( 0 ) என்று அழைக்கப்படும் பூச்சியம் இந்து நதிப் பள்ளத்தாக்கில் வாழ்ந்த மக்களினாலேயே முதல் எழுதப்பட்டதாம் பூச்சியத்தை அவர்கள் முதலில் ஒரு புள்ளியாக எழுதினார்கள் (.) பின்பு அது (o) சிறு வட்டமாகியது பின்னர் இன்றைய நீள்வட்டமானது (0) இந்துக்களுடன் வணிகத் தொடர்பு கொண்ட அராபியர்கள் அவர்களின் எண் வடிவங்களை மேற்கு நாடுகளுக்கு எடுத்துச் சென்றார்கள்.

**பத்து ஏன் அடியானது:** – பபிலோனியர் தவிர பிறர் தமது எண் முறைக்கு 10 ஐயே அடியாகக் கொண்டுள்ளார்கள். இரு கைகளிலும் உள்ள விரல்களின் தொகை 10 என்பது முக்கிய காரணமாக இருக்கலாம் பத்துக்குப் பதில் பன்னிரண்டு அடிப்படையானால் எண்கணிதம் சுலபமாக இருக்கும் 10, என்ற எண் 2 அல்லது 5 என்ற எண்களால் மாத்திரமே பகுபடும் பன்னிரண்டோ, 2, 3, 4, 6 ஆகிய நான்கு எண்களால் பகுபடும்

எனினும் இதுவரை நிலைத்துவிட்ட வழக்கத்தை இனி மாற்றுவது இலகல்ல

ஆம் புராதன மனிதன் தேவை கருதியே எண்களைத் தோற்றுவித்தான். அதன் பின்னரே அவனால் காலம், தூரம், பரப்பு, கன அளவு ஆகியவற்றை அளவிட முடிந்தது நாகரீக வளர்ச்சியிலும் முன்னேற்றம் காண முடிந்தது.

செல்வி. சற்சொரூபவதி நாதன்.

திருக்குறள்

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு

எண்பொருள ஆகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்பது அறிவு

– திருவள்ளுவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுற்றுச் சூழல் பாதுகாப்பில் நகரக் காடுகளின் பங்களிப்பு

**முகவுரை:-** காடு என்றவுடன் அடர்த்தியான மரக்கூட்டமே பெரும்பாலானோரின் மனக்கண்ணில் தோன்றும். இயற்கைக் காடுகளின் தோற்றம் அவ்வாறு இருப்பது இயல்புதானென்றாலும், நகரக்காடு என்பது வித்தியாசமான கண்ணோட்டத்தில் பார்க்கப்பட வேண்டியதொன்றாகும்.

**வரைவிலக்கணம்:-** நகரக்காடு என்பதை சன அடர்த்தியான பிரதேசத்திலுள்ள மரங்கள் மற்றும் அதனோடு இணைந்த சூழல் ஒழுங்குகள் எனலாம். மரங்களோடு இணைந்த சூழல் ஒழுங்கு என்பது பறவை மற்றும் விலங்கு வாழ்க்கையை குறிக்கும்.

மரங்களுடன் அலங்காரச் செடிகள் மற்றும் பற்றைகள் இணைந்த கலவையாக நகரக்காடு அமையும். பூங்கா, பச்சைப் படுகை (Green Belt), மயானம், விலங்குக் காட்சியகம், மரக் கண்காட்சிப் பிரதேசங்கள் (Arboretums) பாதைகள் (Boulevards), வசிப்பிடங்கள் (Residential Areas) மற்றும் முக்கியமாக வீதியோர மரங்கள் என்பன இக்காட்டு வகைகளில் அமையும்.

சுற்றச் சூழல் எனும்போது மனிதனைச் சுற்றியுள்ள பௌதிக, உயிரின அம்சங்கள் அனைத்தும் அதனுள்ளடங்கும்.

**நகர வாழ்க்கையில் நகரக் காடுகளின் பங்களிப்பு:-** மனித வாழ்வைப் பொறுத்தவரை நகரக் காடுகள் சமூக, பொருளாதார, சூழல் பாதுகாப்பு அணுகு முறைகளில் முக்கிய பங்காற்றுகின்றன. பரபரப்பு மிகுந்த நகர வாழ்க்கையில் மனிதனுக்கு புத்துணர்ச்சியூட்டும் குளிர்மையான தோற்றப்பாடுகளாக இவை விளங்குகின்றன.

நல்ல நிலையிலுள்ள ஒரு நகர மரத்தின் பணப்பெறுமதியானது அதே இனத்தைச் சேர்ந்த கிராம மரமொன்றின் பெறுமதியைவிட இருக்கைந்து மடங்கு அதிகமானது என்று மொல் (Moll, 1987) என்பவர் குறிப்பிடுகின்றார்.

**சூழல் பாதுகாப்பில் நகரக் காடுகள்:-** இன்றைய காலகட்டத்தில் சூழல் பாதுகாப்பு தொடர்பான அணுகுமுறையே மற்ற இரு அணுகு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைகளை விட முக்கியத்துவமானதாக மாறி வருகிறது. நகரத்தின் சுவாசப்பைகளாக இக்காடுகள் உள்ளன என்று அமெரிக்க அறிஞரான பிரெடரிக் (Frederick Law Olmsted, 1872) என்பவர் குறிப்பிட்டுள்ளதிலிருந்து இதன் முக்கியத்துவத்தை மக்கள் முன்னரே அறிந்துள்ளனர் என்பதை விளங்கிக்கொள்ள முடியும். இவை காற்றில் பரவியுள்ள காபனீரொட்சைட்டை ஒளித்தொகுப்புக்கு பயன்படுத்துவதுடன் பக்க விளை பொருளாக ஒட்சிசன் வாயுவை வெளிவிட்டு சூழலை சுத்திகரிக்கின்றன. இதையே மரங்களின் காபன் அமிழ்த் தொழிற்பாடு (Carbon Sink / Carbon Seqnestration) என்கிறோம். வளி மண்டலத்தில் பிரதான பச்சை வீட்டு விளைவு வாயுவான காபனீரொட்சைட்டின் அளவைக் கட்டுப்படுத்துவதன் மூலம் உலகம் வெப்பமாகும் போக்கை (Global Warming) குறைக்க உதவுகிறது.

நகரக் காடுகளின் சூழல் பாதுகாப்புத்திறன் பற்றிய ஆராய்ச்சிகள் ஐக்கிய அமெரிக்காவில் இடம்பெற்று வருகின்றன. உதாரணமாக நகரப்பரப்பளவில் 11சதவீதம் காடுகளைக் கொண்ட சிக்காக்கோ நகரில் மேற்கொண்ட ஒரு ஆய்வின் படி ஒவ்வொரு வருடமும் 16 மெட்ரிக்தொன் காபனோரொட்சைட்டும் 48 மெ.தொன் கந்தகவீரொட்சைட்டும், 89 மெ.தொன் நைதரசன் ஈரொட்சைட்டும், 191மெ.தொன் மாறன் மண்டல ஓசோனும், 212 மெ.தொன் தூசுப்படலமும் நகரக்காடுமூலம் அகற்றப்படுவதாக யு. எஸ. ஏயின் வனச்சேவைகளின் நகரக்காடுச் சூழல் ஒழுங்கு ஆராய்ச்சிப் பிரிவின் திட்டத் தலைவர் டேவிட்நோவக் (David Nowak) குறிப்பிடுகிறார். கந்தகவீரொட்சைட்டு, ஓசோன் போன்ற சில வாயுக்கள் தாவர ஒளித்தொகுப்புக்கு பயன்படுவதில்லையாயினும் மனித வாழ்வுக்கு அச்சுறுத்தலான அவற்றின் இயல்பானது ஒளித் தொகுப்பின் போது இடம் பெறும் இரசாயன மாற்றங்களின் விளைவாக குறைவான அச்சுறுத்தலுள்ள மூலக்கூறுகளாக மாற்றப்படுகின்றன.

காற்று வடிகட்டி (Air Filter), உறிஞ்சி (Sponge), ஈரமாக்கி (Humidi Fier), வெப்பக்காப்பு (Heat Shield), காற்றுத்தடை (Wind Block), காபன் அமிழ்த்தல் (Carbon Sink) ஆகிய செயல்பாடுகளை நகரக்காடுகள் புரிகின்றன. உதாரணமாக இந்தியாவில் 1966 இல் கலாநிதி லலித் மோகன் மதுர் என்பவர் ஜய்பூர் நகரில் செய்த ஓர் ஆய்வின்படி சராசரியாக 38 மீற்றர் அகன்ற தார் வீதியின் மத்தியில் அவதானிக்கப்பட்ட வெப்பநிலைக்கும் அதேவீதியின் கரையோரத்தில் மரங்களடர்ந்த பகுதியில் அவதானிக்கப்பட்ட வெப்பநிலைக்கும் இடையே உள்ள வித்தியாசம் சராசரியாக 10 – 16 பாகை செல்சியஸ் வரை மாறுபடுகிறது என்பதை கண்டறிந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் நகரக்காடுகள் ஒலி மாசடைவையும் தடுக்கின்றன அல்லது குறைக்கின்றன. திட்டமிட்ட வகையில் அமைக்கப்பட்ட இலையுதிர் மற்றும் ஊசியிலை மரங்களின் அமைப்பின் அடர்த்தி, உயரம் என்பவற்றின் அடிப்படையில் கனரக வாகனங்களின் ஒலி மாசடைவானது 26 வீதம் முதல் 76 வீதம் வரை தடுக்கப்பட முடியும்.

இதுதவிர மனித ஆரோக்கியத்துக்கு ஊறு விளைவிக்கும் புற ஊதாக்கதிரின் நேரடியான தாக்கத்தை தவிர்த்தல், மண்ணரிப்பை கட்டுப்படுத்தல், சக்தி சேமிப்பு போன்ற நோக்கங்களுக்கு ஏற்ற வகையில் உகந்த மரங்களை, பொருத்தமான அமைவிடங்களில் திட்டமிட்டு உருவாக்க முடியும். ஆயினும் இதற்கு பாரிய முதலீடும் நீண்டகால ஆராய்ச்சிகளும் தேவைப்படும்.

பல விதங்களில் நன்மை பயக்கும் நகரக்காடுகளின் சூழல் பாதுகாப்புத் திறனானது அவற்றின் அடர்த்தி. பரப்பளவு மற்றும் கூட்டு (Composition) என்பவற்றில் தங்கியுள்ளது.

**சில பிரதி கூலங்கள் :-** நகரக்காடுகள் பலவிதங்களிலும் மனிதனுக்கு சமூக, பொருளாதார, சூழல் பாதுகாப்பு அணுகு முறைகளில் உதவினாலும் கூட சரியான முறையில் திட்டமிட்டு அமைக்கப்படாவிட்டால் அவை பல்வேறு பிரச்சனைகளையும் உருவாக்கும் சாத்தியக் கூறுகளுண்டு.

உதாரணமாக திட்டமிடாத நகரக்காட்டு அமைப்பானது மின்சார மற்றும் தொலைபேசிக்கம்பி வழிகள், நீர்க்குழாய் வழிகள் போன்ற சமூக உட்கட்டமைப்பு வசதிகளில் இடையூறுகளை ஏற்படுத்தலாம். தாழ்ந்த மற்றும் முறிவடைந்த கிளைகள் கொண்ட மரங்கள், பழமரங்களை வீதியோர மரங்களாக நடுதல் போன்றன விபத்துக்களுக்கு வழி வகுக்க முடியும்.

மேலும் நகரக்காடுகளின் பூந்துணர்கள் மூலம் வெளிப்படும் மகரந்தங்கள் காற்றில் பரவிக்காணப்படும். இது சில சமயங்களில் மனித ஆரோக்கியத்துக்கு ஊறு விளைவிக்கலாம். இத்தகைய மர–இனங்கள் நகரக் காட்டுதிட்டமிடலின் போது தவிர்க்கப்பட வேண்டும். தற்போது இது தொடர்பான ஆராய்ச்சிகள் ஐக்கிய அமெரிக்காவில் இடம்பெற்று வருகின்றன. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் இன்னமும் மேற்சொன்னவை முனைப்பான பிரச்சனைகளாக நோக்கப்படவில்லை.

**ஆலோசனைகள் :-** அபிவிருத்தி அடைந்த நாடுகள் தமது நகரக்காட்டு வளத்தை ஆராய்ச்சிகள் மூலம் திட்டமிட்டு முன்னேற்றி வருகின்றன. ஆனால் இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கு இத்துறையில் வசதி. வாய்ப்புக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைவாகவே உள்ளன. ஆயினும், ஏற்கனவேயுள்ள நகரக்காட்டு வளத்தை நன்கு திட்டமிட்ட முறையில் பேணி வருவதுடன், புதிதாக காடுகளை பொருத்தமான இடங்களில் மக்கள் பங்களிப்புடன் உருவாக்கி வருவது உசிதமாகும். அரச முதலீட்டை பயன்படுத்தி அவ்வாறு உருவாக்கும் திட்டங்களின் போது, இத்துறை சார் நிபுணர்களின் ஆலோசனைகளோடு நாட்டின் காலநிலைக்கு உகந்த, சுதேச இன மரங்களை தெரிவு செய்வது நீண்டகால நோக்கில் பயனுறுதி உடையதாக அமையும். அத்துடன் உயிர்ப்பல்லினத்தன்மை, தொடர்ச்சியாக நிலைநிற்கும் தன்மை போன்ற அம்சங்களையும் இதன்போது கருத்தில் கொள்ள வேண்டும்.

**இலங்கையின் நிலைப்பாடு:-** நமது நாட்டைப் பொறுத்தவரை இவ்விடயத்தில் பல்வேறு தனியார்துறை ஸ்தாபனங்கள் அக்கறை காட்டி வந்தாலும், ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கக்கூடிய நிலையில் நகர அபிவிருத்தி அதிகார சபை (Urban Development Authority) மத்திய சூழல் அதிகார சபை (Central Environmental Authority) உள்ளூராட்சி சபைகள் (Municipal Councils) என்பனவே காணப்படுவதால், இத்துறை சார் அபிவிருத்தி அரசின் கைகளிலேயே இன்று தங்கியுள்ளது. குறிப்பாக, நகர அபிவிருத்தி அதிகார சபையானது காலி முகத்திடல் பசுமை (Gallefaee Green), விகார மகாதேவிப் பூங்காவின் மரங்களின் தகவல்கள் (Inventory) ஆகிய நடவடிக்கைகளை பூர்த்தி செய்துள்ளது. அது போலவே மத்திய சூழல் அதிகார சபையானது வளிமண்டல மாசடைவுகளை காலத்துக்கு காலம் அளவீடு செய்து வருகிறது.

ஆயினும் நகரக்காடுகளோடிணைந்த சூழல் பாதுகாப்பு தொடர்பான ஆராய்ச்சிகளில் இன்றுவரை எதுவிதமான முயற்சிகளும் இலங்கையில் மேற்கொள்ளப்படவில்லை. இந்நிலைமையானது எதிர்காலத்தில் மாற்றியமைக்கப்பட வேண்டியது இன்றியமையாததாகும்.

**உசாத்துணை:**


(1) Dr. Latit Mohan Mathur (1993) "Tree Plantation and Environment Awareness" Ashish Publishing House, New Dolni.

(2) Gene W.direy & Frederick J. Deneke (1986) "Urban Forestry", 2nd Edt, John Wilew & Sons, U.S.A.

(3) Internet.



செல்வி. ஷர்மிலா சொர்ணலிங்கம் B.A (Hons).
புவியியல், யாழ் இந்து மகளிர் கல்லூரி (A.L-1990)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடிப்பிறப்பு

தமிழ் மக்களிடையே ஆண்டு தோறும் பண்டிகைகள் வந்த வண்ணமே இருக்கின்றன. அதிலும் குழந்தைகளை குதூகலிக்கவைக்கும் பண்டிகைகளில் தைப்பொங்கல், சித்திரை வருடப்பிறப்பு, ஆடிப்பிறப்பு, நவராத்திரி, தீபாவளி என்பன முக்கியமானவை.

பூமி சூரியனை ஒருதடவை சுற்றிவர எடுக்கும் காலம் ஒரு வருடம் எனப்படும். இந்த ஒரு வருடம் இரு அயனங்களாகப் பிரிக்கப்படுகிறது. சூரியன் வடதிசையை நோக்கி நகருங்காலம் உத்தராயணம், தென்திசையை நோக்கி நகருங்காலம் தக்ஷணாயனம். தைமாதம் முதல் ஆனிவரை முதல் ஆறு மாதங்கள் உத்தராயணம் ஆகும். ஆடிமாதம் முதல் மார்கழி மாதம் வரையிலான பின் ஆறு மாதங்களும் தக்ஷணாயனம் ஆகும்.

இனி இந்த பன்னிரண்டு மாதங்களும் ஆறு காலங்களாகப் பிரிக்கப்படுகின்றன. சித்திரை, வைகாசி – இளவேனிற்காலம், ஆனி, ஆடி – முதுவேனிற்காலம், ஆவணி, புரட்டாதி – கார்காலம், ஐப்பசி, கார்த்திகை – கூதிர்காலம், மார்கழி, தை – முன்பனிக்காலம், மாசி, பங்குனி – பின்பனிக்காலம்.

தை முதலாம்நாள் உத்தராயணத்தின் ஆரம்பநாள். அன்று தைப்பொங்கல் என்று தமிழ் மக்களும், ஏனைய இந்து சமயத்தவரும் கொண்டாடுவர். புதிதாக அறுவடை செய்த நெல்லைக் குற்றி அரிசியாக்கி பொங்கி அப்பொங்கலை சூரியபகவானுக்குப் படைப்பார்கள். இது பொதுவாக உழவர் திருநாள் என்றே கொள்வர். உழவர் சூரியபகவானுக்கு இப்படியாக நன்றி கூறுவர்.

ஆடி மாதம் நெல்லை விதைத்து பயிர் வளர்ப்பார்கள். ஆகவே ஆடி முதல்நாளையும் மக்கள் ஒரு விழாவாகவே கொண்டாடினர். பல வருடங்களின் முன் தமிழ் மக்கள் அதிகமாகவாழும் பகுதியில் ஆடிப்பிறப்பு பாடசாலை விடுமுறை நாளாக இருந்தது. அன்றைய திருநாளை குழந்தைகள் குதூகலமாக கொண்டாடுமுகமாக ஒருபாட்டையே "தங்கத் தாத்தா" என்று புகழ் பெற்ற யாழ்ப்பாணம் நவாலியூர் – சோமசுந்தரப் புலவர் பாடியிருக்கிறார். அதுமட்டுமா? அன்று முக்கிய இடம் பெறும் உணவுப் பதார்த்தத்தின் பக்குவ முறையையும் அவரே தந்திருக்கிறார். இன்று எத்தனை பேருக்கு இந்தப்பாடல் நினைவிருக்கிறதோ? தெரியாது. ஆனால் இந்தப்பாடலையும் பிள்ளைகளுக்கு பெற்றோர் சொல்லிக் கொடுப்பது நல்லது. தமிழனின் பாரம்பரியம் இதில் அடங்கியிருக்கிறது.

திருமதி. திலகா வீரசிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆடிப்பிறப்பு

ஆடிப் பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே !
கூடிப் பனங்கட்டிக் கூழும் குடிக்கலாம்
கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே !

பாசிப்பயறு வறுத்துக் குற்றிச் செந்நெற்
பச்சையரிசி இடித்துத் தெள்ளி
வாசப் பருப்பை அவித்துக் கொண்டு நல்ல
மாவைப் பதமாய் வறுத்தெடுத்து

வேண்டிய தேங்காய் உடைத்துத் துருவியே
வேலூரிற் சர்க்கரை புங்கலந்து
தோண்டியிரில் நிர்விட்டு மாவை பதிற்கொட்டிச்
சுற்றிக்கு ழைத்துத்தி ரட்டிக்கொண்டு.

வில்லை வில்லையாக மாவைக் கிள்ளித்தட்டி
வெல்லக் கலவையை உள்ளேயிட்டுப்
பல்லுக் கொழுக்கட்டை அம்மா அவிப்பாளே
பார்க்கப் பார்க்கப்பசி தீர்ந்திடுமே

பூவைத் துருவிப் பிழிந்து பனங்கட்டி
போட்டுமா வுருண்டை பயறுமிட்டு
மாவைக் கரைத்தம்மா வார்த்துத் துழாவுவள்
மணக்க மணக்கவா யூறிடுமே

குங்குமப் பொட்டிட்டுப் பூமாலை சூடியே
குத்து விளக்குக் கொளுத்தி வைத்து
அங்கிள நீர்பழம் பாக்குடன் வெற்றிலை
ஆடிப் படைப்பும் படைப்போமே

வன்னப் பலாவிலை ஒடிப் பொறுக்கியே
வந்து மடித்ததைக் கோலிக் கொண்டு
அன்னை அகப்பையால் அள்ளி அள்ளிவார்க்க
ஆடிப் புதுக்கூழ் குடிப்போமே

வாழைப் பழத்தை உரித்துத் தின்போம் நல்ல
மாவின் பழத்தை அறுத்துத் தின்போம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூழைக் குடச்சுட ஊதிக் குடித்துக்
கொழுக்கட்டை தன்னைக் கடிப்போமே

ஆடிப் பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே !
கூடிப் பனங்கட்டிக் கூழும் குடிக்கலாம்
கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே !

—நாவாலியூர் க.சோமசுந்தரப்புலவர்.

## தங்கத் தாத்தா

பிறந்தார் நவாலி ஊரினிலே
பெயரும் சோம சுந்தரமாம்
சிறந்த பாக்கள் பாடலிலே
திறமை மிக்க பெரும்புலவர்

கரும்பின் பாகும் கற்கண்டும்
கனியின் ரசமும் கலந்தாற்போல்
விரும்பி எவரும் சுவைத்திடவே
விதம் விதமாகப் பாச்செய்தார்

ஆடிப் பிறப்பு விடுதலைக்கு
அவித்த பல்லுக் கொழுக்கட்டையும்
கூடிக் குடிக்கும் கூழையுமே
கொடுத்தார் பாவில் சுவையூட்ட

கத்தரித் தோட்ட வெருளிதனைக்
கற்பனை செய்த பாடலுக்கு
ஒத்த பாக்கள் வேறுண்டோ
ஓவியமாகச் செய்து வைத்தார்

தங்கத் தாத்தா தமிழின்பம்
தந்த தாடிக் கிழவனவர்
தந்த பாக்கள் சுவைத்து நாமும்
தணியா இன்பம் அடைவோமே!

கவிஞர் சு. துரைசிங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரத நாட்டியத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

கலைகளுள் தெய்வீகக் கலையான பரத நாட்டியத்திற்கு ஒரு வரலாறு உண்டு என்பது தெரிந்தது. இக்கலையின் தோற்றம். வளர்ச்சி பற்றி சற்று ஆராய்ந்து பார்ப்போம்.

இப்பரத நாட்டியமானது கி.மு 3000 ஆண்டு பழமை வாய்ந்தது எனக் கருதப்படுகிறது. சிந்து வெளி நாகரீக காலத்திலேயே நடனம் முக்கியமான ஓர் இடத்தை வகித்திருக்கலாம் என்பதை அங்கு கண்டெடுக்கப்பட்ட மண்ணாலான மற்றும் கல், வெண்கலத்தாலான உருவச் சிலைகளின் வாயிலாக அறிந்து கொள்ளலாம்.

வேத காலத்திலும் நடன நாடகக் கலையானது மலர்ச்சியுற்ற நிலையிலேயே இருந்தது. நடனம் கோவில்களிலே இருந்ததாக தெரிகிறது. ஆகம விதிப்படி அபிஷேகம் முதலியன முடிந்த பின் இறுதி நிகழ்ச்சியாக நடனம் இறைபணியாக ஆடப்பட்டது. இதனைத் தொடர்ந்தே கோவில்களில் **நவசந்தி** நாட்டியம் எனக் கருதப்படும் சமபாதம், புஜங்க லலிதம், சந்திரா நிருத்தம், ஊர்த்துவபாதம், குஞ்சிதம் புஜங்கம், மண்டலம், தண்டபாதம், புஜங்க திராசம் ஆகிய ஒன்பதும் பிரமசந்தி, இந்திரசந்தி, அக்கினிசந்தி, யமசந்தி, நிருத்திசந்தி, வருண சந்தி, வாயுசந்தி, குபேரசந்தி, ஈசானசந்தி, எனும் நவஸந்திகளிலே அவ்வச் சந்திகளுக்குரிய தெய்வங்களைக் குறித்து கொடியேற்ற, கொடியிறக்க திருவிழாக்களின் போது அவரவர்க்குரிய தாளம், இராகம், பண், நிருத்தம், வாத்தியம் இவற்றிற்கேற்ப ஆடப்பட்டு வந்துள்ளன. வேத காலத்திலே நடனம் பற்றிய குறிப்புகள் ரிக், யசுர், சாம, அதர்வண வேதங்களிலே காணப்படுகின்றன.

அடுத்து மௌரியர் காலத்தில் பரதகலை அரசியல் காரணங்களுக்காக பயன் படுத்தப்பட்டது. நடனமகளிர் அந்நாட்டு அரசனுக்கெதிராக உளவறிய வரும் ஒற்றர்களிடமிருந்து இரகசியங்களை சாதுரியமாகப் பெற்றுக் கொண்டு அரசனுக்குக் கூறுவர். இவர்கள் **ராஜ நர்த்தகிகள்** என அழைக்கப்பட்டனர்.

தொடர்ந்து வந்த குப்தப்பேரரசு காலத்தில் நடன சிற்பங்கள் மூலம் அக்காலத்தில் நடனம் வகித்திருந்த இடத்தை அறியலாம். தற்கால நடனக் கச்சேரியினை நினைவூட்டும் வகையில் அக்காலத்திற்குரிய சிற்பங்களிலே நடனக் காட்சிகள் செதுக்கப்பட்டுள்ளன. கி. பி 6ம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூற்றாண்டைச் சேர்ந்த நேர்த்தியான நடராஜ சிலை ஒன்று கிடைத்தது.

பரதக்கலை அன்று நாட்டிய நாடகமாகவே ஆடப்பட்டது என்பதற்கு பரதரின் நாட்டிய சாஸ்திரத்தில் சான்றுகள் உள்ளன. பரதர் 2ம் நூற்றாண்டளவில் இந்நூலினை எழுதியதாக கூறப்படுகின்றது. இந்தியாவில் பற்பல மாநிலங்களிலும் பரத நாட்டியம் பரவியது. பரத நாட்டியமானது அவ்வவ் மாநிலங்களுக்குரிய கலாச்சார பாரம்பரியங்களின் ஊடாக சிற்சில மாற்றங்களுடன் கேரளா, கல்கத்தா, மணிப்பூர், ஒரிஸா, ஆந்திரா ஆகிய 5 மாநிலங்களில் முறையே கதகளி, கதக், மணிப்புரி, ஒடிசி, குச்சுப்பிடி என்று 6 வகை சாஸ்திரிய நடனங்களாகப் பரிணமித்தது.

தமிழ்நாட்டிலும் பரதநாட்டியம் நாட்டிய நாடக பாணியிலே அமைந்திருந்தது. அன்றைய நிலையில் இதனைக் **கூத்து** என்று அழைத்தனர். ஆடுபவர்களைக் **கூத்தர், கூத்தியர்** என்றும் பாடலைப் பாடுவோரை **பாணர், விறலியர்** என்றும் அழைத்தனர். கூத்து மார்க்கம், தேசி என இருவகைப்பட்டது. சாஸ்திரிய நடனம் மார்க்கம் எனவும் பொதுமக்களுக்குரிய நடனம் தேசி எனவும் அழைக்கப்பட்டது. சிலப்பதிகார காலத்திற்கு முன்னர் நடனம் தேசி என்று அழைக்கப்பட்டது. அக்காலத்தில் **வேலன் வெறியாடல், கூத்து** முதலிய ஆடல் வகைகள் இருந்தன என்பதற்கு சங்ககால இலக்கியங்கள் சான்று பகர்கின்றன.

இதன்பின் சிலப்பதிகார காலத்திய நடனம் தமிழ்நாட்டில் இருந்ததென்பதற்கு இக்காவியமே சான்றாகும். நடனம் சாஸ்திரிய நடனமாக்கப்பட்டது. கதாநாயகியாகிய மாதவி 11 ஆடல் வகைகளைப் பயின்று அரங்கேற்றம் செய்தாள். அவை **கொடுகொட்டி, பாண்டரங்கம், அல்லியம், மற்கூத்து, துடிக்கூத்து, குடக்கூத்து, பேடிக்கூத்து, மரக்காற்கூத்து, பாவைக்கூத்து, குடைக்கூத்து.** என்பனவாகும். சிலப்பதிகாரத்தின் **ஆச்சியர் குரவை, வேட்டுவவரி** என்பன அக்காலத்தில் பொதுமக்களிடையே நிலவிய நடன வகைகள் பற்றிய செய்திகளைத் தெரிவிக்கின்றது.

தமிழ்நாட்டில் சைவ சமயம் தளர்ச்சி அடையத் தொடங்க சமணம் பரவ ஆரம்பித்தது. சமணத்தின் வளர்ச்சி பரதத்தின் முதல் வீழ்ச்சியாகக் கருதவேண்டியுள்ளது. சமணருக்குப் பின் மீண்டும் சைவம் தழைத்தோங்க பல்லவ காலத்திலேயே இதற்கு முக்கிய கேந்திர நிலையங்களாக விளங்கியவை ஆலயங்களே. மக்களோடு ஒன்றி வாழ்ந்த கலையானது பின் அரசசபைக்கு வந்து இறுதியாக தெய்வ சந்நிதானத்தில் கொண்டுவரப்பட்டது. தெய்வீக வடிவம் பெற்றது. பல்லவர் பின் வந்த சோழர்காலம் மேலும் பரதக்கலைக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்துக்கம் அளித்தது. நடனம் ஒரு கிரியையாக கொள்ளப்பட்டது. இதற்கு ஆடுவதற்கென ஆடல் மகளிர் அமர்த்தப்பட்டு அவர்களுக்கு மானியமும் வழங்கி கௌரவித்தார்கள். இவ்ஆடல் மகளிரை **தேவரடியார்** என அழைத்தனர். நடராஜரின் திருவுருவமும் அவரின் 108 கரண நிலைகளும் சிற்பத்தில் அமைக்கப்பட்டன. தமிழகம் எங்கும் ஆலயங்கள் நிர்மாணிக்கப்பட்டன.

இதன் பின் சோழப்பேரரசின் வீழ்ச்சியின் பின் பரதத்தின் 2வது வீழ்ச்சி ஆரம்பமாகியது. பின் விஜய நாயக்கர் காலத்தில் தேவதாசிகளிடம் சென்றது. அவர்களின் ஒழுக்க சீர்கேட்டினால் பரதக்கலை தனது புனிதத் தன்மையை இழந்தது. நடனம் ஆடுபவர்களுக்கு சமுதாயத்தில் மதிப்பு குறைந்தது. 19ம் நூற்றாண்டில் வடிவேலு சகோதரர்கள் இந்நடனத்தை மாற்றி அமைத்தார்கள். இவர்களுள் தஞ்சை பொன்னையா அவர்கள் முறையான அடவு வகைகளைத் தாளத்திற்கு அமைத்து பரதநாட்டிய நிகழ்ச்சிக்கு நிரல் ஒன்றையும் தயாரித்தார். இன்று பரதநாட்டியத்தில் காணப்படுவது போல **அலாரிப்பு. ஜதிஸ்வரம். சப்தம். கௌத்துவம். வர்ணம். பதம். தில்லானா** என நிகழ்ச்சிகளை ஒழுங்கு முறைப்படி வகுத்தார். இவ்நிகழ்ச்சி அமைப்பே இன்றும் வழக்கில் உள்ளது.

இந்திய தேசிய எழுச்சியின் போது சுப்பிரமணிய பாரதியாரின் சுதந்திரப் போராட்டப் பாடல்களுக்கு நடனம் ஆடப்பட்டது. சங்கீதம். பரதம் ஆகிய கலைகள் எழுச்சியுறத் தொடங்கின. இன்றைய பரதக்கலையின் புனிதத்துவத்தை உருவாக்கி எமக்கு தந்தவர்களுள் ஈ. கிருஷ்ணய்யர். ஸ்ரீமதி. ருக்மணி அருண்டேல் ஆகியவர்களின் பங்களிப்பு முக்கியமானதாகும். நடனமாடுவது ஒரு குறிப்பிட்ட வகுப்பினர் தான் என்ற விதியை மாற்றி பிராமணப் பெண்ணான தானே நடனம் ஆடி பரதக்கலைக்கு புத்துயிர் அளித்தார். அதன் பின் 'கலாஷேத்தரம்' எனும் நிறுவனத்தை நிறுவி அங்கு மாணவர்களுக்கு நாட்டியப் பயிற்சி அளித்தார். இதன் பின் பரதநாட்டியம் **தேசிய கலையாக்கப்பட்டு பாடசாலைகளில் ஒரு பாடமாகவும் கற்பிக்கப்பட்டு வருகிறது.**

**இலங்கையில் யாழ் பல்கலைக் கழகத்திலும், பாடசாலைகளிலும், தனியார் நிறுவனங்களிலும் பரதநாட்டியம் கற்பிக்கப்பட்டு வருகின்றது. பரதநாட்டியம் அதாவது <u>பாவம், இராகம், தாளம்</u> ஆகியவை ஒன்று சேர்ந்து உருவான <u>பரதநாட்டியமானது</u> இன்று எல்லோராலும் விரும்பதக்கதாகவும், எல்லோராலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு நுண்கலையாக ஆற்றுகைக் கலைகளில் ஒன்றாக மிளிர்கின்றது.**

செல்வி. சங்கீதா விபுலஸ்கந்தா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துளசியின் சிறப்பு

டாக்டர் ஓ. செல்வராஜ்

## துளசியின் சில மருத்துவக் குணங்கள் :

துளசி கற்ப்பூர வாசனையுடையது. கார்ப்புச் சுவை; கசப்பு துணைச் சுவை, வெப்ப வீரியம் கொண்டது.

வெப்பமுண்டாக்கி, கோழையை அகற்றி, வியர்வையைப் பெருக்கும்.

கபம், இருமல், காய்ச்சல், அஜீரணம், பித்தம், இழுப்பு, வீக்கம், முதலிய பல நோய்களுக்கு இது அரிய மருந்து.

துளசியைத் தழுவி வரும் காற்று உடலுக்கு நன்மை தரும்; நோய்களை அகற்றும்.

துளசியின் வாசனையால் விஷப்பூச்சிகள் அதன் அருகில் வருவதில்லை, ஆகவே நம் முன்னோர் வீட்டுமுற்றத்தில் துளசி மாடம் கட்டித் துளசியைப் போற்றி வளர்த்தனர்.

துளசி இலைகளும், துளசி தீர்த்தமும் அளவற்ற மருத்துவக் குணங்களைக் கொண்டவை. இவற்றைத் தினமும் உண்டும், பருகியும் வந்தால் நோய்கள் வாரா; வந்த நோய்களும் தணியும்.

துளசியின் மருத்துவப் பயன்களைப் பக்தர்கள் அனைவரும் பெறவேண்டும் என்பதற்காகவே, விஷ்ணு கோவில்கள் அனைத்திலும் துளசி இலைகளும், துளசி தீர்த்தமும் மகா பிரசாதங்களாக வழங்கப்படுகின்றன.

உள்ள நோய்களையும், உயிர் நோய்களையும், தீர்ப்பவர் விஷ்ணு; உடல் நோய்களைத் தீர்ப்பது துளசி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேதத்தில் துளசி:

துளசியின் மருத்துவக் குணங்களை அதர்வ வேதம் இவ்விதம் சிறப்பித்துக் கூறுகிறது.

"தோல், மாமிசம் எலும்பு ஆகியவற்றில் படர்ந்த கொடுமையான நோய்களைக் கிருஷ்ண துளசி நீக்கும். உடலுக்கு நல்ல நிறம் தரும். தொடர்ந்து பயன் படுத்தினால் பல நோய்கள் தீரும். ஆகவே துளசி மிகவும் அற்புதமான மருத்துவக் குணங்களைக் கொண்டது"

வேத காலப் பழமையும், பெருமையும் உடையது துளசி. இது தெய்வீக மூலிகையாகத் திகழ்கிறது.

விஷ்ணு நீர், குளிர்ச்சி. ஆகவே விஷ்ணு கோயிலின் பிரசாதம் துளசி தீர்த்தம், குளிர்ச்சியைத் தவிர்க்கும் ஆற்றலுடைய மற்றொரு பிரசாதம் துளசி இலைகள்.

துளசியை வீடுகளில் வழிபடுகிறோம்; கோயில்களில் வழிபாட்டுப் பொருளாகப் பயன் படுத்துகிறோம்.

விஷ்ணுவிற்குப் பிரியமான மாலை துளசி.

தொகுப்பு.
திருமதி. திலகா வீரசிங்கம்.

(நன்றி: ஸ்ரீராம கிருஷ்ண விஜயம் பங்குனி 2001 - இதழ்)

அவரவர் தமதமது அறிவு அறி வகைவகை
அவரவர் இறையவர் என அடி அடைவர்கள்;
அவரவர் இறையவர் குறைவு இலர்; இறையவர்
அவரவர் விதிவழி அடைய நின்றனரே.

- ஸ்ரீ நம்மாழ்வார் (திருவாய்மொழி)

# குரு தட்சணை

எழில் கொஞ்சும் அழகாபுரி கிராமத்தில் கந்தன் என்றொரு ஏழைக்குடியானவன் தன் குடும்பத்துடன் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தான். விதியின் விளையாட்டால் கந்தன் ஒரு விபத்தில் இறக்க நேரிட்டது. கந்தனின் மனைவியான சோதி மிகவும் கஷ்டப்பட்டுத் தந்தை இல்லாக் குடும்பத்தைக் காப்பாற்றி வந்தாள். அவள் தினமும் ரொட்டி சுட்டு விற்றுக் குடும்பத்திற்குச் சோறு போட்டாள். நாளடைவில் சோதி நோய் வாய்ப்பட்டாள். அவளால் வெளியே சென்று ரொட்டிகளை விற்று வர முடியவில்லை. இதனால் மூத்த மகன் குமரன் பாடசாலைக்குச் செல்ல முன் தனது தாயார் சுட்ட ரொட்டிகளை விற்றுப் பெற்ற பணத்தை தாயிடம் கொண்டு வந்து கொடுத்து விட்டுச் செல்வான். பணம் சேர்ந்தால் தான் அவனால் பாடசாலைக்குச் செல்ல முடியும். அதனால் அவன் பாடசாலைக்கு ஒழுங்கில்லாமற் சென்றான்.

ஒரு நாள் குமரனது வகுப்பிற்குப் புதிய வகுப்பாசிரியர் மாற்றப்பட்டார். அவர் குமரனின் வரவு ஒழுங்கில்லாததைக் கண்டு மாணவர்களிடம் அதைப் பற்றி வினவினார். அதற்கு அவர்கள் "அவன் இப்படித்தான் சேர், ஆடிக்கொருநாள் அமாவாசைக்கொருநாள் என்று தான் பாடசாலைக்கு ஒழுங்கில்லாமல் வருவான்" என அலுத்துக் கொண்டனர். ஆசிரியர் ஒரு நாள் குமரனை அழைத்து அதற்கான காரணத்தை வினவினார். குமரனின் குடும்ப வறுமையை உணர்ந்த ஆசிரியர் அவன் படிப்பதற்கு வசதிகளைச் செய்து கொடுத்தார். அவனும் ஊக்கம் எடுத்துக் கற்றமையால் விரைவில் முன்னேறிப் பல்கலைக் கழகம் நுழைந்து ஒரு வைத்திய அதிகாரியாக வெளி வந்தான். சில ஆண்டுகளில் அவன் அந்த ஊரிலேயே பிரசித்தி பெற்ற வைத்தியராக ஆனான்.

குமரனின் வாழ்க்கை இவ்வாறு மலையிலிருந்து ஊற்றெடுக்க ஆறு போல் ஓட, அந்தோ பரிதாபம்! குமரனை வாழ்க்கையென்னும் ஏணியில் ஏற்றிவிட்ட அந்த மாமனிதரின் வாழ்வில் சூறாவளி வீசியது. தனது ஒரேயொரு தங்கையின் அகால மரணத்தை எண்ணி எந்த ஒரு நிலையிலும் மனம் தளராத அவரே அழுதழுது நோய்க்கு உள்ளாகி நடக்க முடியாத நிலையில் கட்டிலுக்குத் தஞ்சமானார். குருவின் நிலை இவ்வாறிருப்பதை அறிந்த குமரன் அவரைப் பார்க்க ஓடோடி வந்தான்.

ஆசிரியரைக் கண்ட குமரன் மிகவும் மனமுடைந்து போனான். அவரை வைத்தியசாலையில் சேர்த்தான். தனது சகநண்பனான கமலனின் உதவியோடு ஆசிரியருக்கு என்ன வருத்தம் என்பதைச் சோதித்தான். அப்போது தான் அவருக்கு இருதயக் கோளாறு இருப்பதாகவும் அவருக்கு மாற்று இருதய சிகிச்சை செய்தாலன்றி அவரை காப்பாற்ற முடியாது என்பதையும் கண்டு பிடித்தனர். ஆசிரியரை எப்படியாவது காப்பாற்ற வேண்டும் இல்லாவிடில் நான் அவருக்கு நன்றியற்றவனாகி விடுவேன் அவரைக் காப்பாற்ற நான் என்ன செய்வேன் என்று மனம் நொந்தவாறு வீட்டை நோக்கி நடந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறு நாள் ஒரு கடிதம் எழுதித் தனது கையினுள் வைத்துக் கொண்டு ஒரு கைத்துப்பாக்கியையும் எடுத்துக் கொண்டு வைத்தியசாலை வளாகத்தினுள் நுழைந்தான். தனது நண்பனின் தங்குமறையின் அருகில் சென்று வாசலில் கடிதத்தை வைத்து விட்டுத் தனது உயிரை அவ்விடத்திலேயே துப்பாக்கியினால் சுட்டு மாய்த்தான். சத்தம் கேட்டு வெளியே வந்தவன் குமரனின் கடிதத்தையும் அவனது இறந்த மேனியையும் கண்டான். அடக்க முடியா வேதனையுடன் கதறியழுதவாறு கடிதத்தைப் பிரித்துப் படித்தான். அதில் குறிப்பிடப்பட்டிருந்ததாவது

அன்புள்ள கமலனுக்கு.

என்னை இவ்வளவு பெரிய வைத்தியனாக மிளிர வைத்த, என் கண்கள் போன்றவரை இந்நிலையில் பார்க்க என்மனம் விரும்பவில்லை. அவர் எனக்குச் செய்த உதவிக்குக் கைமாறு செய்ய வேண்டிய தருணம் வந்துவிட்டது. நான் இறந்த பின் எனது இதயத்தை எடுத்து அவருக்குப் பொருத்தி என் குருவைக் காப்பாற்றி விடு நண்பா! இதை கட்டாயம் செய்வாய் என்ற நம்பிக்கையில் உன்னிடம் இருந்து விடைபெறுகிறேன்.

அன்பு நண்பன்
குமரன்.


இதைப் படித்ததும்.

*'வாழ்க்கை என்றால் ஆயிரம் இருக்கும்*
*வாசல் தோறும் வேதனை இருக்கும்*
*வந்த துன்பம் எதுவென்றாலும்*
*வாடி நின்றால் ஓடுவதில்லை*
*எதையும் தாங்கும் இதயம் இருந்தால்*
*இறுதி வரைக்கும் நிம்மதி இருக்கும்'*

என குமரன் அடிக்கடி பாடும் பாடல் ஞாபகத்திற்கு வந்தது. தனது அழுகையையும் கட்டுப்படுத்திக் கொண்டு அவனது ஆத்ம சாந்திக்காக அவனது ஆசையை நான் நிச்சயம் நிறைவேற்றுவேன் என உறுதிபூண்டான். ஆசிரியருக்கு சத்திரசிகிச்சை மூலம் இதயத்தைப் பொருத்தினான். ஆசிரியரும் குணமடைந்து எழுந்தார். தனது சீடன் செய்த உதவிக்காக அவனை ஆத்மார்த்தமாகத் தொழுது அவனது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்தார்.

ஆக்கம்.
செல்வி. ஆரணி மருதயினார்.
ஆண்டு–10 B இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**தேவையான பொருட்கள் :**

| | |
|---|---|
| கோதுமை மா | 250 கிராம் |
| சீனி | 100 கிராம் |
| ரின்பால் | 1. |
| பேரீச்சம்பழம் | 250 கிராம் |
| அப்பச்சோடா | 2 தேக்கரண்டி |
| கசு, பிளம்ஸ் | 50 கிராம் |
| தேயிலை | 2 தேக்கரண்டி |
| வனிலா | சிறிதளவு. |
| மாஜரீன் | 250 கிராம் |

**செய்முறை** :- பேரீச்சம்பழத்தை முதல் நாள் இரவு விதை நீக்கி, 1 தேக்கரண்டி அப்பச்சோடாவை இட்டு, தேயிலை சாயத்தையும் விட்டு ஊறவிட வேண்டும்.

மறுநாள் 1 தேக்கரண்டி அப்பச்சோடாவை 250 கிராம் மாவுடன் சேர்த்து இரண்டு முறை அரிக்கவேண்டும். பின்பு மாஜரீனையும், சீனியையும் சேர்த்து அடித்து பின் ரின்பாலையும் ¼ Tin நீரையும் சேர்க்க வேண்டும். பின்பு பேரீச்சம்பழத்தையும் சேர்த்து அடிக்க வேண்டும். சிறிதளவு வனிலாவையும் விடவும்.

பின் சிறிது சிறிதாக மாவை சேர்த்து கசு, பிளம்ஸ்சையும் சேர்க்கவும். பின்பு மாஜரீன் பூசிய தட்டில் ஊற்றி முன்னரே சூடேற்றிய Oven (180 பாகை) இல் ¾ மணி நேரம் வைக்கவும். (நேரம் சிறிது ½ - ¾ வித்தியாசப்படலாம்).

எழுதியவர்.
திருமதி. பரமேஸ்வரி சச்சிதானந்தன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓம் ஓம் ஓம் ஓம் ஓம்

## இந்துவா சைவமா?

இந்துவா சைவமா – ஏனிந்தக் குழப்பம்?
முந்து சிவன் முந்தி வந்தான் பெண் தெய்வத்துடனே – உண்மை
பிந்தியவன் கூட்டி வந்தான் பெருமாளை என்று
எந்தக் குழந்தையும் சொல்லாதோ இன்று –
பெண் தெய்வம் பார்வதியாள்
சிவனென்னும் சேயோன் தூயவனாய்த் துலங்க,
பச்சை நிறப் பாவையவள்வனைச் சுற்றியே
இயற்கையிலாதி சக்தி யெனக் கொண்ட
சாக்த மதம் பிறந்ததுவே அப்போ,
கண்ணவன் கார்முகில் வண்ணனவன்
களியமுதன் கழல் வணங்குவா ரமைத்த
வைண மதம் கண்டீர் பின்னே –
சிவனார் தேவியுடன் களிநடம் புரிய
களிறுகள் தலைக்கண்டு கணபதி யுருவெடுக்க
கடிதெனத் தோன்றியது காணபத்தியமெனும் மதம்
இளைய மகன் முருகனாம்
இன்று நேற்றல்ல –
இனிய ரதி மதனுடன் கணையெறியச் சிவனும்
பனிமலையில் ருத்திரனாய் மதனவனை எரித்து
பங்கஜங்களுள்ள சரவணப் பொய்கை தனில்
பொறியாறு நெற்றிக் கண்ணிலிருந்து தோன்றி
உருப்பெற்று உடன் வந்து வீழவே – உலகை
உய்விக்க வந்துதித்த முருகனை வழிபடல்
கௌமார மதமாகும் சங்கரர் சொற்படி –
இந்து சமயம் ஒன்றே சன் மார்க்கங்கள் யாவும் சொல்வதென்ன
தான் வணங்கும் தெய்வத்தைத் தூய்மையுடன் நினைந்து –
உற்ற நெறி ஒன்று உண்மை யென்று
மனமுருகி நாடினால் அறி வீரன்றே!

ஆக்கம் :– திருமதி. திலகா விவேகானந்தன் விஜயரத்தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம் கொழும்புக்கிளை

## எட்டாம் ஆண்டு (2001) அறிக்கை

03.02.2001 தொடக்கம் 09.02.2002 வரையும்

சங்கத்தின் ஏழாவது ஆண்டுப் பொதுக்கூட்டம் 2001ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 3ஆம் திகதி கொழும்பு 4 லொறன்ஸ் வீதி 75ஆம் இலக்கத்தில் இருக்கும் சரஸ்வதி மண்டபத்தில் செல்வி சற்சொரூபவதி நாதன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு 21 அங்கத்தவர்கள் சமூகமளித்திருந்தனர்.

நடப்பு ஆண்டின் புதிய நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்கள் – திருமதி லீலா நாகரத்தினம்
– திருமதி புஷ்பம் சுப்பிரமணியம்
– திருமதி மகேஸ் பரமநாதன்

தெரிவு செய்யப்பட்ட நிர்வாகக்குழு

தலைவி – செல்வி சற்சொரூபவதி நாதன்

உபதலைவர்கள் – திருமதி தயாநிதி செல்வநாயகம்
– திருமதி பொன்மலர் கந்தசாமி
– திருமதி பரமேஸ்வரி சச்சிதானந்தன்

பொதுச்செயலாளர் – திருமதி சிவகாமி அம்பலவாணர்

உதவிச்செயலாளர்கள் – திருமதி விமலா மணிவாசகன்
– திருமதி திலகவதி வீரசிங்கம்

பொருளாளர் – திருமதி அபிராமி கயிலாசபிள்ளை

உதவிப்பொருளாளர் – திருமதி பரமேஸ்வரி பாலசிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்வாகக்குழுவினர் —
திருமதி ருக்மணி அரசரத்தினம்
செல்வி ஞானலக்ஷ்மி பாலசிங்கம்
திருமதி தனவதி கனகரட்ணம்
திருமதி ஞானேஸ்வரி ஞானசேகரம்
திருமதி நந்தினி மோகன்
திருமதி கமலா கனகசபை
திருமதி தனபாக்கியம் நித்தியானந்தன்
திருமதி மல்லிகாதேவி சரவணபவான்
திருமதி இராஜகுமாரி கதிர்காமநாதன்
திருமதி கோமளாம்பாள் செல்வரத்தினம்
திருமதி சத்தியலக்ஷ்மி சிவலிங்கம்
திருமதி அங்கயற்கண்ணி சிவப்பிரகாஷ்
திருமதி இந்திராணி சோமசுந்தரம்
செல்வி சிவமலர் சுப்பிரமணியம்
திருமதி கௌரி தேவசேனாதிபதி
திருமதி தற்பராதேவி தில்லைநாதன்
திருமதி சிந்தாமணி வன்னியசேகரம்
திருமதி திலகா விஜயரத்தினம்
திருமதி புவனேஸ்வரி யோகலிங்கம்
திருமதி கமலருளேஸ்வரி சர்வானந்தா
திருமதி வத்சலா நாகலிங்கம்
செல்வி மஞ்சுளா ஜீவலிங்கம்

கணக்குப் பரிசோதகர் — கணேசலிங்கம் அன்ட் கொம்பனி. சார்ட்டட் அக்கவுண்டன்ஸ். **16-B, Schofield Place,** கொழும்பு 3

இந்த வருடம் பின்வரும் செயல்களை நடேற்றினோம்

1. புது வருட மலிவு விற்பனை ஒழுங்கு செய்தோம்

2. கல்லூரிக்கு ஒரு Fax Machine வாங்கி அனுப்பினோம்.

3. திருமதி மகேஸ் பரமநாதன் அன்பளிப்புச் செய்த English Electronic Typewriter ஐக் கல்லூரிக்கு அனுப்பினோம்.

4. கல்லூரிக்கு ஒரு இணையத்தளத்தை அமைத்துக் கொடுத்தோம்.

5. யாழ் நாதம் இதழ் 7 ஐப் பிரசுரித்தோம்.

6. வருடாந்த ஒன்று கூடல் நிகழ்வை நடத்தினோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7 வட – கிழ்ப் பிராந்திய பாடசாலைகளின் பழைய மாணவர் சம்மேளனம் (வ.கி.பி.ப.மா.சம்) 2001ம் ஆண்டு எமது கல்லூரியின் சிறந்த மாணவிக்கு அளிக்கும் பொன் விருதுக்கு செல்வி காயத்திரி சிற்சபேசனை அதிபர் மூலம் தெரிவு செய்தோம்.

8. மேற்குறிப்பிட்ட சம்மேளனத்தின் உதவியுடன் ரூபா 51,000 பெறுமதியான நூல்களை எங்கள் கல்லூரி நூல்நிலையத்திற்கு கொள்வனவு செய்வதற்குத் தேவையான ஆரம்ப ஒழுங்குகளை கல்லூரி அதிபரின் உதவியுடன் செய்தோம்.

9. சம்மேளனத்தின் வேண்டுகோளுக்கு இணங்க ஆண்டு 11 விஞ்ஞானப் பாடநூலில் உள்ள பிழைகளை திருமதி கமலாருளேஸ்வரி சர்வானந்தா தொகுத்துக் தந்தார்.

சங்கத்தின் நடப்பு ஆண்டில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டங்கள்

| திகதி | இடம் | வரவு |
|---|---|---|
| 17.02.2001 | சரஸ்வதி மண்டபம் 75 லொறன்ஸ் வீதி கொழும்பு 4 | 19 |
| 03.03.2001 | சரஸ்வதி மண்டபம் 75 லொறன்ஸ் வீதி கொழும்பு 4 | 23 |
| 17.03.2001 | சரஸ்வதி மண்டபம் 75 லொறன்ஸ் வீதி கொழும்பு 4 | 21 |
| 13.06.2001 | சரஸ்வதி மண்டபம் 75 லொறன்ஸ் வீதி கொழும்பு 4 | 12 |
| 21.7.2001 | சரஸ்வதி மண்டபம் 75 லொறன்ஸ் வீதி கொழும்பு 4 | 10 |
| 03.11.2001 | சரஸ்வதி மண்டபம் 75 லொறன்ஸ் வீதி கொழும்பு 4 | 17 |

புது வருட மலிவு விற்பனையை 01.04.2001 ஞாயிற்றுக்கிழமை சரஸ்வதி மண்டபத்தில் நடத்தினோம்.

எமது கல்லூரி பழைய மாணவியும் சிறந்த பல்கலைக்கழக உபவேந்தருமாகிய திருமதி உமாராணி குமாரசுவாமி அவர்கள் பிரதம அதிதியாகச் சமூகமளித்து மலிவு விற்பனையைத் திறந்து வைத்தார். அவருடன் அவரது கணவர் திரு குமாரசுவாமி அவர்களும் சேர்ந்து வருகை தந்து மலிவு விற்பனையைச் சிறப்பித்தார்.

மலிவு விற்பனைக்கு ஒரு மேசைக்கு ரூபா 2,000 வீதம் 14 மேசைகள் ஒழுங்கு செய்தோம். பின்வருவோர் மேசைகள் ஒழுங்கு செய்தனர்

| | |
|---|---|
| திருமதி ருக்மணி அரசரட்ணம் | 2 |
| செல்வி மஞ்சுளா ஜீவலிங்கம் | 2 |
| திருமதி நளாயினி சிவலிங்கம் | 2 |
| திருமதி ஜெகதா ஜெயகிருஷ்ணா | 1 |
| திருமதி பரமேஸ்வரி சச்சிதானந்தன் | 1 |
| திருமதி கோமளாம்பாள் செல்வரத்தினம் | 1 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி பொன்மலர் கந்தசாமி 1
செல்வி சிவமலர் சுப்பிரமணியம் 1
திருமதி அபிராமி கயிலாசபிள்ளை 1
திருமதி விமலா மணிவாசகன் 1
கலாநிதி வி அம்பலவாணர் 1

பல அங்கத்தவர்களின் சிற்றுண்டி வகைகள். தேனீர். குளிர் பானம் ஆகியவை விற்பனைக்கு மெருகூட்டின. கணனியில் தமிழ் இணையத்தளம் ஆகிய கண்காட்சிகளும் விற்பனையைச் சிறப்பித்தன.

மலிவு விற்பனையுடன் ஒரு பந்தயக்குலுக்குச் சீட்டும் (Raffle draw) நடத்தினோம். இதன்மூலம் எமக்கு ரூபா 70,000 கிடைத்தது. என்றும்போல் இம்முறையும் கலாநிதி – திருமதி அம்பலவாணர்கள் Ticket விற்பனையில் முன்னணியில் திகழ்ந்தனர்.

பந்தயக் குலுக்குச்சீட்டிற்கு 10 பரிசுகள் கொடுத்தோம். அதன் விபரங்கள் பின்வருமாறு

Results of Raffle draw held at 5.00 p.m. on 1st April 2001, at Saraswathie Hall along with the New-year sale of J H L C – O G A – Colombo Branch.

| Prize No. | Prize | Donated by | Winning Ticket No. | Winner |
|---|---|---|---|---|
| 1 | Coffee Maker | Mrs. Kamalaruleswary Sarvananda | 1777 | Mr.S. Saravanabavan, 30 Haig Road, Colombo 4. Tel:580532 |
| 2 | Citizen Wrist watch | Mrs. Buvaneswary Yogalingam | 935 | Mr. R. Rockman, 8F ¼, Collingwood Place, Colombo 6. Tel:595782 |
| 3 | Coffee Set | Mrs. Parameswary Balasingam | 79 | Mrs. Arunthathi Selliah, 114/5, Rosmead Place, Colombo 7, Tel:698626 |
| 4 | English Bed Sheet | Mrs. Thanawathy Canagaratnam | 1702 | Ms.R.Perera, S-4, 1st Floor, CCSM Complex, Colombo 11 Tel;347570-2 |
| 5 | Thermos Flask | Mrs. Rukmany Arasaratnam | 1573 | N.Shanmugalingam Polpathy Lane, Kokuvil East, Jaffna |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | |
|---|---|---|---|---|
| 6 | Wall-Clock | Mrs. Kamala Kanagasabai | 770 | K. Mahadevan, Central Bank Colombo. Tel:321063 |
| 7 | Wall-Clock | Mrs. Parameswary Satchithananthan | 461 | T. Jasmin, D/2/6 James Flats. Tel:524436 |
| 8 | A set of 6 glasses | Mrs. Thanawathy Canagaratnam | 1505 | P. Sushila, 6/3, Cambridge Place, Colombo 3. |
| 9 | Handbag | Miss.Satsorupawathy Nathan | 1350 | S. Selvi, 16, Francis Mahadeva Avnue, Colombo 4. Tel 582113 |
| 10 | Pan | Mrs. Manjula Jeevalingam | 3816 | J. Geeva, 7/8 1st Lane, Brown Road, Jaffna |

ஒரு **Facsimile Machine - Fax Model – Philips HFC 171 Manufacturer – Philips Electronic N. V. Austria**
**Ceylon Business Appliances Ltd., 112, Reid Avenue, Colombo 4** இல் இருந்து ரூபா 24,750/- கொடுத்து 28.05.01 அன்று கொள்வனவு செய்தோம்.

எங்கள் சங்க போஷகர்களில் ஒருவரும் முன்னாள் ஆசிரியையுமான திருமதி மகேஸ் பரமநாதன் தன்னுடைய **English Electronic Typewriter** றை கல்லூரிக்கு அனுப்புமாறு 21.07.2001 அன்று கையளித்தார்.

இவற்றை **S S Enterprises, 220, Keyser Street, Colombo 11** மூலம் எங்கள் கல்லூரிக்கு அனுப்பி வைத்தோம்.

இவை இரண்டும் கிடைத்ததாகவும் அதற்கு அங்கு ரூபா 2,500 கொடுத்ததாகவும் கல்லூரி அதிபர் திருமதி ஜெயராஜா தொலைபேசி மூலம் 20.11.2001 அன்று தெரிவித்தார்.

எங்கள் கல்லூரிக்கு ஒரு இணையத்தளம் அமைக்க தூண்டுகோலாக இருந்ததுடன் எங்கள் சங்க அனுமதி கிடைக்கும் வரையும் இலவசமாக இணையத்தளத்தை வைத்திருந்தமைக்கும் நாம் **Tamil Cyber** நிறுவனத்திற்கு நன்றி கூறுகிறோம். **Tamil Cyber** நிறுவனத்தின் உறுப்பினர்கள் முக்கியமாக எங்களுக்கு உதவிய திரு உலகப்பிரகாசம் ஜெயதீபனும் அவரது நண்பர்களும் யாழ் இந்துக் கல்லூரி பழைய மாணவர்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணையத்தளத்தின் மூலம் வெளிநாடுகளில் வாழும் பல பழைய மாணவிகள் எங்களுடன் தொடர்பு கொண்டுள்ளார்கள். அத்துடன் வெளிநாடுகளிலுள்ள பழைய மாணவிகள் சங்கங்களும் எங்களுடன் தொடர்புகொண்டுள்ளன. அச்சங்கங்கள் பலவழிகளில் எங்களுடைய கல்லூரிக்கு உதவுவதற்கும் இணையத்தளம் வழி வகுத்துக் கொடுத்துள்ளது.

இணையத்தளம் அமைத்ததற்கு பல பாராட்டுதல்களும் பழைய மாணவிகளிடமிருந்தும் நலன் விரும்பிகளிடமிருந்தும் எமது சங்கத்திற்குக் கிடைத்தன.

*A message from Mrs. Thayananthy Thirunanthakumar of Australia is as follows:*

"Found the URL from Uthayan and pleasantly surprised. I am happy to note that in par with other great educational institutions in the world, Jaffna Hindu Ladies College has also entered into the Cyber Space. I congratulate the School Principal, Staff and Students and wish them all the very best. Last but not least, the services of the old students cannot be put into words. Great service! Keep it up girls!"

*Another message from Mr. Paramanathy Suthahararajah of Canada is given below:*

"I am very happy to see your web site. I appreciate very much your efforts"

*Ms. Rathymalar Kajendrakumar of USA had sent the following message:*

"It is good to hear that my old school is having a web site to put the school into the fast developing electronic world."

யாழ்நாதம் இதழ் 7, 100 பிரதிகள் செய்ததாக திருமதி சிவகாமி அம்பலவாணர் தெரிவித்தார். இதற்கு Risograph இற்கு ரூபா 3,309 உம் யூனி ஆட்ஸ் நிறுவனத்திற்கு ரூபா 7,300 செலவானது.

இந்த வருட ஒன்றுகூடல் நிகழ்வு 2001–12–16ஆம் திகதி சனிக்கிழமை மதிய போசனவிருந்துடன் ஷண்முகாஸ் ஹோட்டல்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

53/3 இராமகிருஷ்ண வீதி, கொழும்பு 6 இல் நடைபெற்றது. இந்த நிகழ்வில் யாழ்நாதம் இதழ் 7 ஐ வெளியிட்டோம்.

இந்த நிகழ்ச்சிகளில் எமது கல்லூரியின் பழைய மாணவியும் Asian International School இன் தற்போதைய அதிபருமாகிய திருமதி Goolbai Gunasekara அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்கள். தலைவி செல்வி சற்சொரூபவதி நாதன் எல்லோரையும் வரவேற்று உரையாற்றினார். அதைத் தொடர்ந்து பிரதம அதிதி உரையாற்றினார்.

யாழ்நாதம் இதழ் 7 இன் முதல் பிரதியை நூல் ஆசிரியை திருமதி சிவகாமி அம்பலவாணர் பிரதம அதிதியான திருமதி Goolbai Gunasekara அவர்களுக்குக் கையளித்தார். அதைத் தொடர்ந்து உதவிச் செயலாளர் திருமதி விமலா மணிவாசகன் நூலின் பிரதிகளை எல்லோருக்கும் விநியோகித்தார். அன்று நடந்த விற்பனையின் மூலம் ரூபா 4,420 எமக்குக் கிடைத்தது.

எங்கள் சங்கக் கூட்டங்களை நடத்துவதற்கு இலவசமாக சரஸ்வதி மண்டபத்தைத் தந்துதவும் இந்து வித்தியா விருத்திச் சபைக்கு நாம் என்றும் கடமைப்பட்டுள்ளோம்.

எங்கள் சங்கக் கணக்குகளை இலவசமாக பரிசோதனை (Audit) செய்து தந்த திரு சச்சிதானந்தனுக்கும் இதை ஒழுங்கு செய்த திருமதி பரமேஸ்வரி சச்சிதானந்தனுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சங்க அலுவல்களில் எனக்கு உறுதுணையாக இருந்த எங்கள் சங்கத் தலைவி செல்வி சற்சொரூபவதி நாதனுக்கும் பொருளாளர் திருமதி அபிராமி கயிலாசபிள்ளைக்கும் நிர்வாகக் குழு அங்கத்தவர்களுக்கும் நான் நன்றிகூறக் கடமைப் பட்டுள்ளேன்.

இவ்வருடம் சில புதிய அங்கத்தவர்கள் எமது சங்கத்தில் சேர்ந்துள்ளமை வரவேற்கத் தக்க ஒரு விடயமாகும். இவர்களின் திறமை பழைய அங்கத்தவர்களின் ஆற்றலுக்கு மெருகூட்டி எங்கள் கல்லூரியின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவும் என்பது எனது நம்பிக்கை.

திருமதி சிவகாமி அம்பலவாணர்
கௌரவ செயலாளர்
09.02.2002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்மீகம் அறிவுறுத்தும் பெண்களின் கடமைகள்

1> சுமங்கலிப் பெண்கள் நெற்றியில் திலகம் எப்பொழுதும் வைத்துக்கொள்ள வேண்டும். தலை விரித்தபடி எந்த சுபகாரியங்களும் செய்தல் கூடாது.

2> கர்ப்பிணிகள் தேங்காய் உடைக்க கூடாது. உடைக்கும் இடத்தில் இருக்கக் கூடாது.

3> இரவில் வீட்டைப் பெருக்கக் கூடாது. அப்படி பெருக்கினாலும் குப்பையை வெளியே கொட்டக் கூடாது.

4> அதிகாலையில் எழுந்து அவசியம் கோலம் போடவேண்டும். இயலாதவர்கள் வெள்ளி, செவ்வாய் கிழமைகளில் ஆவது வீட்டிற்கு மஞ்சள் தண்ணீர் தெளித்து கோலமிடவேண்டும். இதனால் இலட்சுமி தேவி மகிழ்ந்து வீட்டிற்கு வருவாள்.

5> வெறும் கைகளால் சோற்றையோ, காய்கறிகளையோ, உப்பையோ பரிமாறக் கூடாது.

6> எந்தப்பொருளையும் 'இல்லை' என்று கூறக்கூடாது.

7> வீட்டிற்கு சுமங்கலிகள் வந்தால், வெற்றிலை, பாக்கு, பழம், பூ, மஞ்சள் அளித்து வரவேற்க வேண்டும்.

8> விடியற்காலையில் நீராடி திலகம் இட்டு அடுப்பைப் பற்றவைத்து பாலைக்காய்ச்சி சுவாமிக்கு நிவேதனம் செய்து பருகவேண்டும். அப்படிச் செய்தால் அக்னி ஹோத்ரம் செய்த பலனை அடையலாம் என்று வேத சாஸ்திரம் கூறுகிறது.

9> பெண்கள் மாலை நேரங்களில் விளக்கேற்றி வணங்க வேண்டும். அப்படிச் செய்தால் அவர்களுக்கு ஆசிகூற தேவர்கள் இல்லங்களுக்கு வருகின்றனர். அதனால் தீபம் ஏற்றும் நேரத்தில் பெண்கள் வீட்டில் இருப்பது நல்லது.

10> தனக்கு தரப்படும் புஷ்பம், வெற்றிலை, பாக்கு, பழம், மஞ்சள் போன்றவற்றை பக்தியுடன் வாங்க வேண்டும். அலட்சியமாக வாங்க கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**11>** பெண் என்பவளுக்கு அவளின் தூய்மையுள்ளமும், உபசரிக்கும் தன்மையும் சிறந்த அணிகலன்களாகும்.

## பூஜையறை யோசனைகள்

**i.** முதல் நாள் பூஜைக்கு உடுத்திய வேட்டி, நார்ப்பட்டு, வெறும்பட்டு மறுநாள் அப்படியே உடுத்தலாகாது. பட்டு தானே தோஷம் இல்லை என்றாலும் துவைத்து உலர்த்தியதே சுத்தம் ஆகும்.

ஆதாரம் (ஆலயம் ஆகஸ்ட் 2000)

**ii.** சாதாரணமாக வீட்டிற்கு அர்ச்சனை முடித்து பிரசாதம் எடுத்து வருவோம். ஆனால் சிவன் கோவில் வழங்கப்படும் விபூதிக்கு மட்டும் இது விதிவிலக்கு. விடயம் தெரிந்தவர்கள \ அறிந்தவர்கள் சிவன் சொத்து குலநாசம் என்று தரப்படும் விபூதியையும், வில்வத்தையும் கூட கோவிலிலேயே விட்டு விட்டு வருவார்கள்

**iii.** எந்த ஒரு சுபகாரியமும் தடங்கலின்றி நடைபெற வீட்டுப் பெரியவர்கள் கலந்து குல தெய்வத்தை வணங்கி வீட்டே மற்றதைத் தொடங்க வேண்டும்.

**iv.** இறைவனுக்கு வைக்கப்படும் தாம்பூலத்தில் 6 வெற்றிலைகள், (பூச்சி அரிக்காத) இரண்டு கனிப்பாக்குகள் வைக்கப்பட வேண்டும். என்பது சாஸ்த்திரம்–பொட்டலம் கட்டிய பாக்கு வைக்கக் கூடாது.

**v.** பண்டிகை நாட்களில் அம்மனுக்குக் கரைக்கும் ஆராத்தியில் (சிவப்பு) சுண்ணாம்பு கலக்கக் கூடாது. வெறும் குங்குமத்தில் தான் கரைக்க வேண்டும். மனிதர்களுக்குக் கரைக்கும் ஆராத்தியில் தான் மஞ்சளும், சுண்ணாம்பும் கரைக்க வேண்டும்.

**********************************************

*** ஆலயத்தில் அமருவது ஏன்?**

ஒன்று :- சிவன் கோயிலில் இருந்து சிறு தூசிகூட நம் ஆடையில் ஒட்டி நம் வீட்டுக்கு வரக்கூடாது. சிவன் சொத்து குலநாசம் என்பார்கள்.

இரண்டு :- சிவனின் பூதகணங்கள் நம்முடன் வீட்டிற்கு வந்து தொல்லை கொடுக்கும். கோயிலில் அமர்ந்து வீட்டுக்கு வந்தால் வருவதில்லையாம்.

***விஷ்ணு ஆலயத்தில் எப்படி? அங்கு அமர்ந்துவீட்டு வரக்கூடாது ஏன்?**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஷ்ணுவின் கருணையால் லட்சுமி நம்முடன் வீட்டிற்கு வருகிறாள் என்பது ஒரு கருத்து. எனவே விஷ்ணு கோயிலில் உட்கார வேண்டாமே!

* நம்மைத் தெரிந்து கொள்ளாமல் வெளி உலகத்தை தெரிந்து கொள்ள முடியாது. அதே போல நம்மை முழுமையாக தெரிந்து கொண்ட பின்னர், வெளியுலகத்தில் தெரிந்து கொள்வதற்கென ஒன்றுமே இல்லை.

- ஸ்ரீ ரமண மகரிஷி -

***மகாலட்சுமி யாரிடம் தங்குவாள்?**

வேலை செய்யாமல் சோம்பித் திரிகிறவர்களிடமும், நாத்திகர்களிடமும், கெட்ட நடத்தை உள்ளவர்களிடமும், பிறர் குற்றம் காண்கிறவர்களிடமும் மகாலட்சுமி ஒரு போதும் தங்குவதில்லை. தீயவைகளை விரட்டி, ஈஸ்வர சிந்தையுடன் எச் செயல் செய்தாலும், மகாலட்சுமி நம்முடனிருந்து பேரருள் புரிவாள்.

* திருமணமாகாத பெண்கள் விபூதி பிரசாதத்தை கழுத்தில் பூச வேண்டும். இதனால் விரைவில் கழுத்தில் மாங்கல்யம் அணியும் பாக்கியம் ஏற்படும்.

* திருமணமான பெண்கள் குங்குமத்தின் மேல் நெற்றியில் திருநீறு அணிய வேண்டும்.


## 'கம்' என்றால் சும்மாயிரு

*** 'சும்மாயிரு' என்பது ஒரு தத்துவம்.**

வேலைகளைச் செய்யாமல் சும்மாயிருப்பது என்பது பொருள் அல்ல. மனத்தில் பல்வேறு எண்ணங்கள் அலைபாயாமல் இருத்தலே சும்மாயிரு என்பதற்குப் பொருளாகும். சரி **"கம் முன்னு சும்மா இரு! எல்லாம் தானே நடக்கும்"** என்று சொல்கிறார்களே! அதற்கு என்ன பொருள்? உண்மையில் **'கம்'** என்பது விநாயகனின் **பீஜமந்திரம்**. **"ஓம் கம் கணேசாய நம"** என்பது விநாயகரின் ஆறு எழுத்து மந்திரம். **'கம்'** என்ற விநாயக மந்திரத்தை உச்சரித்துக் கொண்டிருந்தால் எல்லாக் காரியங்களும் விக்கினம் இன்றி பரம மங்களமாய் முடியும் என்பதே இதன் பொருளாகும்.

திருமதி. பரமேஸ்வரி பாலசிங்கம்
உப தலைவி யாழ் இ. ம. க. ப. மா. சங்கம், கொழும்புக்கிளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# *Peace*

P is for perfect trust-we have
in the peacemakers.
E is for the excellent effect they make.
A is for all to live peace fully.
C is the confidence we have in them.
E is again for every body
Who wants peace.

Mrs.T.V.Wijeyaratnam.

"Sabba Sattha Bavanthu Sukhi Tattha"
-May all beings be happy-The Buddha-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நியூசிலாந்தில் இந்து திருமணம்

திருமணம் இனிமையான வாழ்வின் தொடக்கம். திருமணங்களில் உச்சரிக்கப்படும் மந்திரங்களின் மூலமே பிற்கால வாழ்க்கை. வாழ்க்கையை எப்படி வாழவேண்டும் எனத் திருமண மந்திரங்கள் மூலம் பெரியோர்கள் சொல்லியுள்ளனர். அவர்களின் அறிவுரையே அவர்களுடன் கூடவந்து புதுமணத் தம்பதிகட்கு வழிகாட்டும். இந்த உண்மையை உணர்ந்தவர்கள் மெய்யழகனும் விஜிதாவும்.

மேலும் வேதங்களிலும் சாஸ்திரங்களிலும் நம்பிக்கை உடைய இவர்கள், மந்திரங்கள் புரோகிதர்களால் ஓதப்படும் போது சூழ்நிலை புனிதம் பெறுகின்றது. இறையுணர்வு மேலோங்குகின்றது. திருமணச் சடங்குகள் அர்த்தமுள்ளதாகிப் பிதிர்கள், நவக்கிரகங்கள், கடவுள்கள், தேவர்கள் எல்லோருடைய பரிபூரண ஆசீர்வாதங்களும், புதிய இல்லறத்தை ஆரம்பிக்க இருக்கும் தங்களுக்கு உறுதுணையாக இருக்கும் என நம்பினார்கள். அவர்களுடைய பெரு விருப்பிற்கு இறைவனும் துணையாக இருந்தார்.

நியூசிலாந்து நாட்டின் தென்தீவின் புகழ்மிக்க CHRIST CHURCH நகரில் நடைபெற்ற முதல் இலங்கைத் தமிழர் திருமணத்தைப் பார்த்தபோது, காலம் எப்படி மாறினாலும் இளைய சமுதாயம் தமிழ் மரபு, பண்பாடு, பாரம்பரியம் மிக்க கலாச்சாரத்தையும் அவை உணர்த்தும் உண்மைகளையும் இன்னமும் மறக்கவில்லை என்பதைக் காண முடிந்தது.

மெய்யழகன் விஜிதா திருமணம் CHRIST CHURCH ல் வாழும் 30 இலங்கைத் தமிழ்க் குடும்பங்களினதும், அவர்களது இல்லத் திருமணவிழா போல் நடைபெற்றது என்பது தனிச் சிறப்பு. தம்பதிகளின் பெற்றோர்கள் கூடவே இல்லாத இடத்தும், அந்தக்குறை இல்லாதபடி, இலங்கையில் பெற்றோர், உறவினர் மத்தியில் நடைபெற்ற திருமணவிழா போன்றே களைகட்டி இருந்தது.

எந்த ஊரில் வாழ்ந்தாலும், தம்முடைய கலாச்சாரத்தையும், பண்பாட்டையும் மறவாது பேணிப் பின் பற்றி வருவது தமிழ் மண்ணிற்கே உரிய தனிச்சிறப்பு. வெளிநாடுகளில் வாழ்பவர்கள் முறை தெரிந்த புரோகிதர்களையோ, கிரியைகட்குத் தேவைப்படும் பொருட்களையோ முறைப்படி பெற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைபவங்களை நடாத்துவது என்பது முடியாத காரியமாகிவிட்டது. முறைப்படி பயின்ற குருக்கள், புரோகிதர், சாஸ்திரிகள் அருகிப்போன நிலையில் ஓர் புதுமையான மாறுதல் நிகழ்ந்து வருகின்றது. இவர்கட்குப் பதிலாகப் பூஜா மந்திரங்களும், செய்முறைகளும் பதிவு செய்யப்பட்ட ஒலி நாடாக்கள் பயன்படுத்தப் படுகின்றன. அதிஷ்டவசமாகப் பழமையே இங்கு கையாளப்பட்டது.

மணமக்களது திருமணப பதிவு இலங்கையில் நடைபெற்றுவிட்டது. திருமணம் நியூசீலாந்து நாட்டில் என்று தீர்மானித்து நாள் நேரம் என்பன நிச்சயிக்கப்பட்டு மணமகள் மங்கலப் பொருட்களுடன் தனியே வந்து விட்டார்கள். மணமகனது நண்பர்கள் உதவிக்கரம் நீட்டினார்கள். ஆளுக்கு ஒரு பொறுப்பை ஏற்றார்கள். கூடிக்கலந்து ஆலோசித்து மணமகன் வீடு மணமகள் வீடுகள் தீர்மானிக்கப்பட்டன. திருமணத்தை மண்டபம் ஒன்றில் நடாத்துவதையே பெரிதும் விரும்பினார்கள். மண்டபமும் தெரிவு செய்யப்பட்டு, மணவறை தயாரித்தல், மண்டப அலங்காரம் எனப்பொறுப்புகளை நண்பர்கள் ஏற்றனர். மணமக்களது அலங்காரம், ஆலாத்தி எடுத்தல், சுமங்கலிப் பெண்கள் கூடவே வருதல், தோழன், தோழி, தாரை வார்த்துக் கொடுப்பவர், பின் அதைப் பெறுபவர் எனபலரும் விரும்பிப் பொறுப்புகளைச் சுமந்தனர். இவை எல்லாவற்றையும் ஒருங்கிணைக்க விபரம் தெரிந்த ஒருவர் முன் வந்தார்.

திருமணத்திற்கு தேவைப்படும் மணமாலைகள், மங்கலப் பொருட்களான வெற்றிலை, மாவிலை, முடியுடன் தேங்காய், தர்ப்பைப் புல் போன்ற பொருட்கள், திருமணத்தை நடாத்தும் புரோகிதர் என்பன CHRIST CHURCH நகரில் இல்லை. என்ன செய்யலாம் என்று ஆலோசித்த போது மாலைக்குரிய பூக்களைத் தந்தால் மாலைகளைச் செய்யலாம் என முன் வந்தனர். எனவே நண்பர்கள் தெரிந்த இடங்களில் பூக்கள் சேகரித்து, அழகான மாலைகள் தயாரிக்கத் தாராளமாகத் தந்து உதவினர். மங்கலப் பொருட்களை பிஜித்தீவுகள் அல்லது நியூசீலாந்தின் வடதீவின் நகரங்களான அக்லாந்து, வெலிங்டன் நகரங்களில் இருந்து தருவித்துத் தரும்படி பிஜி-இந்தியர் கடை ஒன்றில் சொல்லி வைத்தனர். ஆனால் உரிய நேரத்தில் அவை வந்து சேரவில்லை. எனவே உள்ளூரில் கிடைக்கும் வெற்றிலை, மாவிலை, தர்ப்பைப்புல் போன்ற வடிவமைப்புள்ள இலைகள் பயன்படுத்தப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து முக்கியமானது திருமணத்தை நடாத்தி வைக்கும் புரோகிதர். நியூசீலாந்து வடதீவின் நகரங்களான அக்லாந்து, வெலிங்டன் நகரங்களில் ஏராளமான இலங்கைத் தமிழக குடும்பங்கள் காலம் காலமாக வசித்து வருவதால், அங்கு திருமணம் போன்ற நிகழ்ச்சிகள் அடிக்கடி நடைபெறுவதால், திருமணத்திற்குத் தேவையானவை இலகுவாகப் பெறமுடியும். அங்கு கிரியைகள் தெரிந்த தமிழ் புரோகிதர், இந்திப் பண்டிதர்கள் எனப் பலரும் உள்ளனர். இங்கு அப்படி எவரும் இல்லை. அங்கிருந்து வந்து தங்கி திருமணத்தை நடாத்தி செல்வதாயின் செலவு மிக அதிகம்.எனவே இங்கு தானே பூனூல் தரித்த ஹரே ராமா ஹரே கிருஷ்ணா இயக்கத்தைச் சேர்ந்த புரோகிதர் ஒருவரை அழைப்பது எனத்தீர்மானித்தனர். அவருக்கு வைணவ சமபிரதாயப்படி திருமணம் நடாத்திய அனுபவங்கள் உண்டு. மந்திரங்களை ஆங்கிலத்தில் எழுதி வைத்தே சொல்வார் ஆலை இல்லா ஊருக்கு இலுப்பைப் பூ சர்க்கரை அல்லவா!

இப் புரோகிதருக்குத் தமிழ், சைவ முறைப்படி கிரியைகளைச் சொல்லிக் கொடுத்து செய்விக்க வயதில் முதிர்ந்தவரும், நல்ல அனுபவம் வாய்ந்தவருமான ஒருவர் முன் வந்தார். அண்மையில் இலங்கையில் திருமணம் செய்து வந்துள்ள ஒருவரின் வீடியோ நாடா போட்டுக் காண்பிக்கப்பட்டது. வெப் சைட் PANCHANGAM .COM ல் விபரிக்கப்பட்டிருந்த தென் இந்தியப் பிராமண முறைத்திருமணப் பகுதியை வாசித்து அறியச் சொன்னார்கள். திருமணக் கிரியை ஒழுங்குகள் வரிசைப்படி ஆங்கிலத்தில் எழுதிக் கொடுக்கப்பட்டது. எல்லாவற்றையுமே கேட்டு, பார்த்து நன்கு அறிந்து கொண்ட அவர் கிரியைகள் செய்யத் தேவையான பொருட்களுடன் வந்து முறைப்படி, ஓமம் வளர்த்து, மந்திரங்கள் சொல்லி, செய்யும் கிரியைகளை விளக்கி திருமணத்தைச் சிறப்பாக நடாத்தி வைத்தார். மணமக்களுக்கு மிக்க மகிழ்ச்சி.

CHRIST CHURCH வாழ் இலங்கைத் தமிழர் அனைவரும் வந்து சிறப்பித்து மணமக்களை ஆசீர்வதித்தனர். திருமணத்தில் எந்தப் பகுதியும் விடுபட்டுப் போகாமல் எல்லாமே நிறைவாகச் சிறப்பாக நடைபெற்றன. இறுதியில் மணமக்கள் அளித்த விருந்துணவு உண்டு, இலங்கையில் தங்கள் சொந்த வீட்டில் நடைபெற்ற திருமணத்தைக் கண்டு மகிழ்ந்த மனநிறைவுடன் சென்றார்கள். வாழ்க மணமக்கள்.


**வை . இரகுநாதன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# GLOBAL BALANCE FOR PEACE

The entire cosmos was created from the Supreme Sovereign Energy Principle. The five elements were created in succession.

The five senses and the sense organs were created for enjoyment of the five elements.




From Vibration to Radiation to Materialization. Creation sprang out as a Nit ness to Divinity.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A rainbow originates from a single ray of white light. A harmonious combination of seven sound notes can produce enchanting music. The entire creation is a Divine Rainbow of the five elements space, Air, Fire, Water and the Earth. Within the five elements lies Divine Energy Chaitanya, which contains the elements and their attributes. These five elements in their undisturbed state are in perfect harmony and balance. Love is the energy, which binds all five elements together. This means that entire creation is attached with Divine Love Energy of Love. They follow the perfect discipline, that is Dharma, which connects and fuses all five elements and their attributes in nature. Thus they follow a perfect discipline. It is understood that nature when left undisturbed is a perfect example in order, harmony and peace; Man, supreme in creation, is also a product of five elements and sustained by the same energy of Love. As part and parcel of nature man can be happy and peaceful only when he is in tune with nature. As a product of same five elements, which constitute the creation, these elements in man should be in balance and harmony; excess of any one of the elements or less may cause imbalance. So there is a law of Nature. In the vast Cosmos man is like a speck. Essentially there is no conflict between man and creation. In the natural way like the child enjoys mother's milk and honeybee enjoys honey from flowers. There can be no objection to man enjoying the resources of nature. But due to his uncontrollable desire and reckless exploitation of natural resources, the natural calamities like earthquakes, volcanic eruption, drought and floods are the results of disturbances in the balance of nature. Mankind today appears like a foolish man who is wielding an axe at the branch of the tree on which he is sitting.

So the sole aim of man must be to practice Sathya, Dharma, Shanty, Prema and Ahimsa, which will help him to experience Divine Bliss and radiate the innate power of love. This will help man to establish him in perfect harmony and peace with creation.

Ohm Sai Ram

Mrs. P. Balasingham
Vice President JHLC Colombo Branch

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கே நிம்மதி

யோசனையுடன் மரத்தில் சாய்ந்திருந்த நிழல்வேந்தன் திடீரென "அடியே கமலா பத்திப்பெட்டியை ஒருக்கா கொண்டுவாவன்" என்றான். அவள் பத்திப்பெட்டியை கொண்டு வந்து கொடுத்ததும் அவன் மனைவியைப் பார்த்து.....

"நேற்றும் மீன் பிடிக்கப்போகேல்ல ஏனெண்டா அங்கால செல்வீச்சு பலமா நடந்ததாம் இண்டைக்கு எப்பிடியாவது நான் மீன்பிடித்துத் தான் ஆகோணும்" என்றான். அதைக்கேட்ட அவன் மனைவி கமலா "வேணாம் இண்டைக்கும் அப்படித்தான் நிலை இருக்கு" என்றாள். ஆனால் நிழல்வேந்தன் எப்போது தான் கமலாவின் சொல்லைக் கேட்டான். வீடாப்பிடியாகக் கடலுக்குச் சென்று விட்டான்.

அங்கு மரத்தோடு கட்டப்பட்டிருந்த தன் படகைக் கட்டவிழ்த்தான். பின்னர் மீன் பிடிக்க கடலுள் தன் படகை செலுத்தினான். அவனுடைய துரதிஷ்டம் அவன் கண்ணில் மீன் படமுன்னர் இராணுவம் வந்த கப்பல் தென்பட்டது. அவன் மனதில் எழுந்தது பயம். ஆனால் அவன் பயந்தது தன் உயிர் பற்றியல்ல. அவனுடைய சிறுகுழந்தைகளின் புன்சிரிப்பு நிறைந்த முகம் தோன்றியதும் அவர்களைக் காப்பாற்றுவது யார் இவ்வாறு யோசித்து கொண்டிருந்த வேளை இரும்புக்குண்டு அவன் உடலைப் பதம் பார்த்தது.

இரவாகியும் தன் கணவனைக் காணவில்லை என்று கமலா கடற்கரைக்குச் சென்றாள். அவள் கடலில் மிதந்து வந்த தன் கணவனின் உடலைக் கண்டதும் அவள் பட்ட துன்பம் யாரறிவார். தன் கணவரின் சடங்குகளை முடித்தாள். தன் பிள்ளைகளைக் காப்பாற்ற கூலி வேலைகள் செய்தாள். இவ்வேளையில் அவளுடைய மகன் நிர்மலுக்கு ௨௦ வயது நெருங்கி விட்டது ஒரு நாள் கமலாவின் தம்பி ஜேர்மனிலிருந்து தொலைபேசியில்தொடர்பு கொண்டான்.

அவன் நிர்மலை ஜேர்மனுக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டான். உடனே கமலா வங்கியில் கடன் வாங்கி தம்பி அனுப்பிய பணத்தோடு ஒருவாறு 10 இலட்சம் திரட்டி கொழும்பு வந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்தாள். அங்கு அவர்கள் தங்கியிருந்த லொஜ்ஜிலேயே ஒரு ஏஜென்சியும் இருந்தமையால் அவருடன் கதைத்துப் பார்த்தனர். அவனின் திட்டம் இங்கிருந்து இந்தியாவுக்கு வான்மார்க்கமாய்ச் சென்று மீதி தூரத்தை தரைமார்க்கமாய் செல்வதாகும். பணம் ஆரம்பத்தில் 2 இலட்சமும் மிகுதி 4 இலட்சம் போய்ச்சேர்ந்ததும் தரவும் என்றான்.

மிக்க வேதனையொடு பணத்தைக் கொடுத்துத் தன் மகனைப் பிரிந்தாள். தாய் மனத்தின் வேதனையை அறிந்த அவன் சிறிது நேரம் செய்வதறியாது நின்றான் பின்னர் அவன் புறப்பட்டான். இந்தியாவுக்குச் சென்ற அவன் அங்கிருந்து ரஷ்யாவுக்குச் சென்று நீர் பௌஸர் ஒன்றில் 23 பேரொடு அவனும் ஒருவனாய் கலந்து சென்றான்.

அங்கு ஜேர்மன் தடைவாசல் காவலர்கள் சந்தேகத்தில் பௌஸரை திறந்தனர் பரிதாபமாக 24 உடல்கள் அந்த பௌஸருள் கிடந்தன. அதேவேளை செல்வீச்சில் காயப்பட்ட நிர்மலின் தாயும் சகோதரியும் கூட இறந்துவிட்டனர். கண்மூடித் திறப்பதற்குள் நிழல்வேந்தனின் குடும்பமே இந்தப் போரினால் அழிந்துவிட்டது இன்னும் எத்தனை குடும்பங்கள் இப்படி இந்தப் போரினால் இறந்து அழிந்திடுமோ! ஆனால் எமது தாய் நாடான இலங்கை நிம்மதியுள்ள சமாதான பூமியாய் மாறும் என்றாவதொரு நாள் இப்புனிதபூமி விடிவுபெறும். இத்தனை காலமும் இரத்தம் குடிக்கும் இராட்சதராயிருந்தவர்கள் யாவரும் விழித்தெழுங்கள். அப்பாவி மக்களைக் கொன்று குவித்த போர் போதும் சமாதானமாய் வாழ்வோம். இலங்கையை ஒரு புனிதபூமியாய் மாற்றுவோம்

ஆக்கம்.
M. Pranavan.

ஒன்றென்று கொட்டு முரசே! – அன்பில்
ஓங்கென்று கொட்டு முரசே!
நன்றென்று கொட்டு முரசே! – இந்த
நானில மாந்தருக் கெல்லாம்.

– மகாகவி. சுப்பிரமணிய பாரதியார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சிவாய நம

# திருக்கேதீச்சரம்

அமைவிடம்:- இலங்கைத் தீவின் வடமேல் பாகத்தில் மன்னார் உள்ளது. அதன் சமீபத்திலுள்ள மாதோட்டத்திலே பாலாவித் தீர்த்தக் கரையிலே திருக்கேதீச்சரம் அமைந்துள்ளது. இது மிகப் புராதனமான சிவத்தலம் ஆகும். புராதன காலத்திலே திருக்கேதீச்சரம் கோயிலையும், மாதோட்டம் கோயில் அமைந்துள்ள இடத்தையும் குறித்தது. இக்காலத்திலே திருக்கேதீச்சரம் என்பது இரண்டுக்கும் பொதுவான பெயராக உள்ளது.

பண்டைய வரலாறு:- திருக்கேதீச்சரம் திருக்கோணமலைக்கும் ஆதியானது. திருக்கேதீச்சரப் பழமை சரித்திரத்துக்கோ அகழ்வாராய்ச்சிக்கோ எட்டாதது. புராணேதிகாசங்களால் ஒருவாறு ஊகிக்கற்பாலது.

ஒரு கற்பத்தில் மேரு மலையின் மூன்று சிகரங்கள் தென் கடலில் வீசப்பட்டன. அவற்றுள் ஒரு சிகரம் இந்திரன் ஆணையால் தேவதபதியான விசுவகன்மாவால் இலங்காபுரியாக அமைக்கப்பட்டது.

மற்றொரு சிகரம் திருக்கேதீச்சரம். அச்சிகரத்தைக் கொண்டு விசுவகன்மாவின் மூத்த புதல்வனான மகாதுவட்டா ஒரு சிறு நகரஞ் செய்து அதன் மத்தியில் ஒரு சிவத்தலத்தையும் அமைத்தான் நகரம் அவன் பெயரால் "மகாதுவட்டாபுரம்" எனப்பட்டது. அதுவே மருவி "மாதோட்டம்" என அழைக்கப்பட்டது. மத்தியில் அமைந்த சிவத்தலம் சிகரத்தின் பெயராகிய திருக்கேதீச்சரம் என வழங்குகின்றது. நவக்கிரகங்களில் ஒன்றாகிய கேது வழிபட்ட தலம் இது ஆனபடியால் "கேதீச்சரம்" என்ற சிறப்பு பெயரால் மிளிர்கிறது என்பர்.

மூன்றாஞ்சிகரம் கந்த மாதனம். இது இராமர் அணைகட்டிய போது நிலைப்பரப்பாக அமைக்கப்பட்டது. மாதோட்டத்தோடு கூடிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கேதீச்சரம் வேறு, இலங்கை வேறு இரண்டும் ஒரு காலத்தில் உண்டானவை.

காலப்போக்கில் கந்த மாதனம் இராமேசுவரத்தோடும் மாதோட்டத்தோடு கூடிய திருக்கேதீச்சரம் இலங்கையோடும் இணைந்து விட்டன.

மகா துவட்டாவுக்கு தம்பியர் இருவர். ஒருவர் பெயர் மது. மற்றவர் பெயர் மயன். மயனின் புதல்வி மண்டோதரி. அவள் நித்திய கன்னிகைகள் வரிசையைச் சேர்ந்த உத்தமி. இராவணனின் மனைவியாவாள். இராவணன் மணக்கும் போது அவள் வயிற்றில் சிவகர்ப்பமாயிருந்து இலங்கையிற் பிறந்தவர் சீதை. இவ் வரலாறு இடைப்பிற வரலாறாயினும் இங்கே அறியத்தக்கது.

இலங்கையின் பூர்வீகக் குடிகளாக இயக்கர்களும், நாகர்களும் வாழ்ந்தார்கள். நாகர் என்ற இனத்தவர் இங்கு வழிபட்டமையாலே திருக்கேதீச்சர நாதனை "நாகநாதன" எனக் குறிப்பிடும் வழக்கமும் இருக்கின்றது.

மாதோட்ட நன்நகரில் இருந்து இலங்கையை ஆட்சி புரிந்த மன்னன் இராவணன் சிறந்த சிவபக்தன். மற்றொரு கற்பத்தில் இமாசல கைலாசத்தின் மூன்று சிகரங்கள் தஷிண பூமியில் வீசப்பட்டன. அவற்றுள் ஒன்று திருக்கோணமலை. அது இலங்கையில் விழுந்தது. அந்த கோணேஸ்வரத்து இறைவனிடம் இராவணன் நீங்காத அன்பு கொண்டிருந்தான். இலங்கையில் இராவணனுடன் போரிட்டு வாகை சூடிய இராமன் திருக்கேதீச்சரத்தில் எழுந்தருளியிருந்த இறைவனை வழிபட்டுச் சென்றான் என்று கூறுவர்.

மகா பாரதத்தின் கதாநாயகனான அருச்சுனன் இலங்கைக்கு வந்த போதுதான் மாதோட்டத்தையடுத்திருந்த பகுதியை ஆட்சி செய்த நாக கன்னியான "அல்லி அரசராணியை"ச் சந்தித்தான் என்று கூறப்படுகின்றது. மன்னார்த் தீவுக்குத் தெற்கேயுள்ள பெருநிலப்பகுதியில் பாழடைந்து காணப்படுவன அவ்வீராணியின் கோட்டை என்று கூறுவர்.

இராமரும், அகத்தியரும், அருச்சுனனும் மாந்தைத் துறைமுகத்தில் இறங்கி இலங்கையில் புகுந்தனர் என்றால் விஜயனும் அவனுடைய நண்பர்களும் அவ்வாறே இங்கு வந்தனர் என்பதை நாம் ஒருவாறு ஊகித்து அறியலாம்.

புராதன காலத்திலேயே திருக்கேதீச்சரத் தலம் மண்மழை பெய்து மணல் மூடிப் பின் காடாய் விட்டது என்று கர்ண பரம்பரைக் கதையுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண வைபவமாலை "விஜயன் கி.மு 6ம் நூற்றாண்டில் இலங்கைக் கரையைச் சேர்ந்ததும் நெடுங்காலமாகப் பாழடைந்து கிடந்த திருக்கேதீச்சர ஆலயத்தைப் புதுப்பித்துக் கட்டினான்" என்று எடுத்துரைக்கின்றது.

ஒரு காலத்தில் இராமேச்சரம் செல்லும் அடியார்கள் கடலின் அக்கரையில் நின்று திருக்கேதீச்சரநாதனை தொழுதனர் அதற்கு சான்றாக நாயன்மாரை கூறலாம்.

ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்தராலும், ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த சுந்தரமூர்த்தி நாயனாராலும் இந்தியாவில் இருந்தபடியே அவர்கள் அகக் காட்சியிற் கண்டு பாடப்பட்ட பெருமை வாய்ந்தது. திருக்கேதீச்சரம் என்னும் நாமம் திருநாவுக்கரசர் திருநாவால் உச்சரிக்கப்பட்டது. மந்திர சக்தி வாய்ந்தது. இவ்வாற்றால் தனக்குத்தானே இணையாய தனிச்சிறப்பு வாய்ந்த புனிதத்தலம் திருக்கேதீச்சரம்.

"கருத நின்ற கேதீச்சரங் கைதொழக் கடுவினையடையாவே" என்ற ஞானசம்பந்தர் வாக்கில் "கருத நின்ற கேதீச்சரம்" கருத்தகத்தே கண்ட மறைந்த கேதீச்சரம் என்று கூறலாம்.

சோழ மன்னர்கள் இலங்கையைப் பொலநறுவையில் இருந்து ஆட்சி செய்த காலத்தில் (993–1070) இத்தலம் இராசேந்திரச் சோழனால் புனருத்தாரணம் செய்யப் பெற்றது. திருவரங்கக் கோயிலுக்கு இணையான ஏழு பிரகாரங்கள் சூழ்ந்த பெருங் கோயிலாகத் திகழ்ந்தது என்பதற்குக் கல்வெட்டுச் சான்று உண்டு. இத்தலம் 'இராஜராஜேஸ்வர மகாதேவன் கோயில்' என்ற சிறப்பு பெயரையும் பெற்றிருந்தது.

இராஜராஜபுரத்தில் இறையிலித் தேவதானமாகக் கோயிலுக்கு நிலம் கொடுக்கப்பட்டிருந்தது. அந்நகர்ப் பகுதியிலிருந்து அரசாங்கத்திற்குக் கிடைத்த வருமானமும் கோயிலுக்குத் தானமாகக் கிடைத்தது. மேலும் நெசவுத் தறிகள், வாணிபம் கடவுகள் ஆகியவற்றிலிருந்து கிடைத்த அரசாங்க வருமானம் கோயிலுக்கு வழங்கப்பட்டது. வைகாசி விசாகம் ஏழு நாளும் திருவிழா எடுப்பதற்கும் தீர்த்தம் ஆடுவதற்கும் ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தன. இத்தலம் சோழர் காலத்தில் இராஜராஜேஸ்வரம் என்ற பெயரால் அழைக்கப்பட்டது.

முதலாம் சுந்தரபாண்டியன் ஆட்சிக் காலத்தில் (கி.பி 1251–1280) திருக்கேதீச்சரம் அரசனின் ஆதரவைப் பெற்று பாண்டிய காலச் சிற்ப முறையில் புதுப்பித்துக் கட்டப்பட்டது. இன்று திருக்கேதீச்சரத்தில் காணப்படும் கற்சிற்பங்கள் சான்றுகளாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1 ம் பராக்கிரமபாகு மன்னன் திருக்கேதீச்சரம் மீது ஆதரவை வழங்கினான். இவனைவிட இலங்கை அரசர்கள் பலர் இதனை ஆதரித்தனர். கி.பி 4ம் நூற்றாண்டில் இங்கு சைவக் கோயில் இருந்ததை 'தாது வம்சம்' என்னும் நூலில் காணப்படுகின்றது. புத்தகோயில்களுக்குக் கொடுக்கும் நன்கொடைகளுக்கான சட்டங்களை மீறுவோர் மாதோட்டத்திற் பசுக் கொலை செய்ததை ஒத்த பாவத்தைப் பெறுவரென்ற எச்சரிக்கை 9ம் நூற்றாண்டைச் சேர்ந்த சிங்களக் கல்வெட்டில் காணப்படுகின்றது. இதன் மூலம் அவர்கள் இக்கோயில் மீது வைத்திருந்த மதிப்பு புலப்படுகிறது.

ஈழத்து இந்து மக்களின் கண்களில் ஒன்றாகவே திருக்கேதீச்சரம் திகழ்கின்றது. அவர்களின் வாழ்வு தாழ்விற்கேற்பத் திருக்கேதீச்சரம் உயர்ந்தும் தாழ்ந்தும் வந்தது. போர்த்துக்கேயர் மாதோட்டத்தில் இறங்கிய போது திருக்கேதீச்சரம் இந்துக்களின் முக்கிய வழிபாட்டு ஆலயமாகத் திகழ்ந்தது.

அவர்கள் தங்கள் ஆட்சியை நிலைபெற செய்வதற்காக இங்கு வாழ்ந்த மக்களை மதமாற்றம் செய்வித்தார்கள். அதைத் தொடர்ந்து திருக்கேதீச்சரம் கொள்ளையடிக்கப்பட்டது. மேலும் இவ்வாலயத்தை 1560ம் ஆண்டளவில் இடித்து அதன் கற்களை எடுத்துச் சென்று மன்னார்த் துறைமுகத்தைக் கட்டினார்கள். இவ்வாறு திருக்கேதீச்சரம் வீழ்ச்சியடைந்தது.

இதன் வீழ்ச்சியோடு ஈழத் தமிழரின் ஆட்சியும் அழிந்தது. சுதந்திரமாக வாழ்ந்த மக்கள் அடிமைகளாயினர். பின்னர் கடற் பெருக்கால் இருந்த இடமும் மறைந்தது. இவ்வாறு 16ம் நூற்றாண்டிலிருந்து 19ம் நூற்றாண்டு தொடக்கம் வரை அந்நியர் ஆதிக்கத்தால் சீரும் சிறப்பும் அற்று அழிவின் கைகளிலே சிக்குண்டு காடாகி காட்சி அளித்தது.

பண்டைக் காலத்தில் அரேபியாக் கடல் வழியாக கப்பற் போக்குவரத்து நடந்தது. அக்கப்பல்களுக்குத் தென்மேல் பருவக் காற்றால் அல்லல் எதுவும் ஏற்படாமல் மாந்தைத் துறைமுகம் பாதுகாப்பளித்தது. இராமரணையின் பவளக் கற்பாறைக்கும் மன்னார்த் தீவுக்கும் தெற்கே சில கல் தொலைவில் மாந்தைத் துறைமுகம் அமைந்திருந்தது.

மன்னார்த் தீவுக்கும், இலங்கைக் கரைக்கும் இடையே இருந்த பகுதி அன்று கப்பற் போக்குவரத்திற்கு ஏற்றதாக விளங்கிற்று. எதிர்பக்கமாக ஓடிய நீரோட்டங்களால் இப்பகுதியில் மணற்றிடர்கள் எதுவும் ஏற்படவில்லை. தென்கிழக்கு, தென்மேற்குக் காற்றுகள் எதிர்பக்கமாக நீரோட்டங்களைச் செலுத்தின. எனவே தடைகள் எதுவுமின்றி ஆழமாக அமைந்திருந்த இக்கால்வாய்க்கூடாகக் கப்பல்கள் எளிதாகச் சென்றுவர முடிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி.பி 2ம் நூற்றாண்டில் மாதோட்டம் இருந்ததை புவியியலறிஞர் தொலமி என்பவர் குறிப்பிட்டுள்ளார். உரோமர், பாரசீகர், அராபியர், சீனர், இந்தியர் முதலிய பல தேசத்தவர்களுடன் வணிகத் தொடர்பு இருந்ததை அங்கு கண்டெடுத்த நாணயங்களால் அறியப்படுகின்றது.

ஏறத்தாழ இற்றைக்கு 3800 ஆண்டுகளுக்கு முன்னர் மாந்தைத் துறைமுகம் இருந்தது. இதன்மூலம் இந்தியாவுக்கு செம்பு ஏற்றுமதி செய்யப்பட்டது. இதனை இலங்கை தொல் பொருள் ஆராய்ச்சித் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் எஸ்.யு. தேரணியகலை என்பவர் 1997 இல் ஆராய்ச்சி முடிவாக வெளியிட்டுள்ளார்.

இவ்வாறு ஆழமும் அகலமும் உடையதாய்ச் சிறப்புடன் விளங்கிய மன்னார்க் கால்வாய் கரி நிறைந்து கப்பற் போக்குவரத்திற்குத் தடையாய் மாறியது எங்ஙனம்? மாந்தைத் துறைமுகம் மணற் குன்றுகள் நிறைந்தும் அலை புரண்டோடிய பாலாவி பள்ளமாகவும் அதனையடுத்த பாகங்கள் மணற்றிடராகவும் மாறியது எவ்வாறு?

மாத்தளை பகுதியின் பரந்த பள்ளத்தாக்கில் ஓடிய நீரும், மல்வத்து ஓயாவும் சேர்ந்து பாலாவி என்ற பெயரோடு அன்று மாந்தைக் கடலில் கலந்தது. இவ்வாறு ஓடிய மல்வத்து ஓயா தன் படுக்கையை மாற்றித் தெற்குப் பக்கமாக மதவாச்சிப் பகுதிக்கூடாகப் பாய்வதாயிற்று. இதனாலும் புதிதாக வெட்டப்பெற்ற "மாபெரும் குளம்" ஒன்று பாலாவியை இரண்டாகப் பிரித்து விட்டது. இவ்வாறு பிரிந்த நீரின் ஒரு பகுதி அருவியாறு என்ற பெயரோடு இன்று மன்னார் தீவுக்குப் பலகல் தொலைவில் கடலில் வீழுகின்றது.

இவ்வாறு இரண்டாகப் பிரிந்ததன் காரணமாகப் பாலாவியின் முகத்துவாரம் சேறும், கரியும் நிறைந்ததாக மாறிற்று. மேலும் புதிதாக அமைக்கப்பட்ட புகைவண்டிப் பாதையும், கற்பாதையும் மன்னார் கால்வாயை முற்றாக மறைத்துவிட்டன. இதனால் மன்னார்த் தீவு இலங்கையோடு இணைக்கப்பட்டது. இப்பொழுது தலைமன்னார் சிறந்த துறைமுகமாக அமைந்து விளங்குகின்றது.

சிறப்பு:- இங்கு எழுந்தருளி இருக்கும் இறைவனின் பெயர் திருக்கேதீச்சரநாதன், இறைவியின் பெயர் கௌரிஅம்பாள், தலவிருட்சம் வன்னிமரம் ஆகும்.

மூர்த்தி, தலம் தீர்த்தம் என்பன ஒரு கோயிலுக்கு மகிமை தருகின்ற முக்கியமான அம்சங்கள் என்று தாயுமானவரின் பாடலில் கூறப்படுகின்றது. இதனால் இக்கோயிலின் இந்த மூன்று அம்சங்களும் எத்தகையன என்பதை கண்டு நாம் அறியலாம்.

திருக்கேதீச்சரப் பெருமானை மாதோட்டத்து "அண்ணல்", "அத்தனர்", "அடிகள்", "எந்தை" என்று போற்றியுள்ளார். தமக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானப்பால் ஊட்டிய எம்பெருமாட்டியை முதற்கண் குறிப்பிட்டு 'தேவி தன்னொடும் திருக்கேதீச்சரத்து இருந்த எம்பெருமானே' என்று கூறுகின்றார்.

"திருக்கேதீச்சரநாதனைக் கைதொழக் கடுவினை அடையா". "கெடும் இடர் வினை", "அருவினை அடையா", "மொய்த்தெழும் வினைபோம்", "தொண்டர் நாள்தொறும் துதிசெய அருள்செய் கேதீச்சரம" என்றெல்லாம் இம்மூர்த்தியின் சிறப்பினை பலவாறாக போற்றி திருஞானசம்பந்தர் தேவாரம் பாடியுள்ளார்.

சுந்தரர் தம் தேவாரத்தில் ஆகாயம், நிலம், நீர், வளி, அக்கினி, சூரியன், சந்திரன், இயமானன் என்னும் எட்டு மூர்த்தங்களும் ஒன்றானவர் என்பதற்கு 'அட்டன்' என்கிறார். அயன், அரி, அரன் என்னும் மூவராயும் அம்மை, அப்பன் என இருவராயும் முக்கண்ணுடைய மூர்த்தியாகிய ஒருவராயும் இருக்கிறார் என்பதை 'மூவரென இருவரென முக்கண்ணுடை மூர்த்தி' என்றார். 'இருவர்' என்று கூறும் பொழுது 'ஈசன் சக்தி பின்னம் இல்லாதவன்' என தத்துவப் பொருளாகும்.

தேவாதி தேவனாக விளங்கும் எம்பெருமான் மேலானவன் என உணர்த்த சிரேட்டன் என்பதை சுருக்கி 'சிட்டன்' என்றும் பாடியுள்ளார். திருவெண்ணை நல்லூரிலே தன்னை தடுத்தாட்கொண்ட பெருமானும் திருக்கேதீச்சரநாதனும் ஒருவரே என்னும் கருத்தில் 'தேவன் எனை ஆள்வான் திருக்கேதீச்சரத்தானே' என்று கூறுகின்றார்.

நாயன்மாரின் பதிகங்களில் மாதோட்டம் என வர்ணிக்கப்படும் இப்பழம் பெருநகர் காலகதியில் பெயர் மருவி இப்போது "மாந்தை" என அழைக்கப்படுகிறது. இறைவனைப்பாடிய அவர்கள் மாந்தையின் சிறப்பையும் போற்றிப் புகழ்ந்தார்கள்.

பாலாவி ஆற்றின் முகத்துவாரத்தில் மாந்தை துறைமுகம் அமைந்து இருந்தது. அங்கு தங்கி நின்ற பெரும் கப்பல்களையும் மாந்தைப் பட்டினத்தில் அமைந்து விளங்கிய பல அடுக்கு மாளிகைகளையும் மலர்ச்சோலைகளையும் பழத்தோட்டங்களையும் தம் தேவாரங்களில் கவின் பெறக் கூறியுள்ளார்கள். களஞ்சியக் கட்டிடங்களும் பாலத்துறையும் பாலாவியின் தென்கரையில் அமைந்து விளங்கின. அவ்விடம் இன்றும் "வங்காலை" (வங்கம்:- கப்பல், காலை:- கப்பல்கள் தங்கும் நிலையம்) என்ற பெயருடன் நிலவக் காணலாம்.

"கடல் வாய்ப் பொன் இலங்கிய முத்துமாமணிகளும் பொருந்திய மாதோட்டம்" என்று ஞானசம்பந்தரும், "வங்கம் மலிகின்ற கடல் மாதோட்டம்" "வானத்துறு மலியுங் கடல் மாதோட்டம்" "கறையார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடல் சூழ்ந்த கழி மாதோட்டம்" என்று சுந்தரரும் தங்கள் தேவாரங்களில் திருக்கேதீச்சரப் பகுதி கடல்படு திரவிய வளத்தினையும், கடல் வணிக மேம்பாட்டினையும் தெளிவாகக் கூறுகின்றனர்.

பாலாவியின் வடகரையில் திருக்கேதீச்சர ஆலயம் அமைந்து திகழ்ந்தது. ஆலயத்தை அடுத்து ஆட்சியாளரின் இல்லங்களும் மக்கள் வாழ்ந்த வளம் மிக்க மாளிகைகளும் காணப்பட்டன. மாளிகைத்திடல் (மாளிகைகள் நிலவிய உயர்ந்தவிடம்) பாப்பாமோட்டை (அந்தணர்க்குரிய இடங்கள்) கோயிற்குளம் (கோயில் நிலத்திற்கு நீர்பாய்ச்சும் குளம்) என்ற பெயர்களுடன் இன்றும் இருப்பதை காணலாம்.

திருக்கேதீச்சரத்தை ஆதிகாலத்திற் கேது என்ற கிரகம் பூசித்த தலம் என்பதும், ஞானசம்பந்தரால் 'இராவணன் மேலது நீறு' என்று சிறப்பிக்கப்பட்ட இராவணின் மனைவி மண்டோதரி வழிபட்ட தலம் என்பதும், இத்தலத்தின் பழமையையும், மகிமையையும் தெள்ளென விளக்குகின்றது.

பாலாவி இந்த சேத்திரத்தின் புண்ணிய தீர்த்தமாகும். இதை சுந்தரர் பாடிய தேவாரத்தில் 'பரிய திரை எறியா வரு பாலாவி' என்கிறார். இதன் சிறப்பினை 'பாவம் வினை அறுப்பார் பயில் பாலாவி' என தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். இதை தொண்டர்கள் போற்றும் பாங்கினை 'பத்தாகிய தொண்டர் தொழு பாலாவி' என்று புகழ்ந்துள்ளார்.

புராதன கோயிலின் மூலத்தானத்தில் இருந்த மிகப் பெரிய மகாலிங்கம் இப்பொழுது கோயிலின் மேற்குப் பிரகாரத்திற் பிரதிட்டை செய்யப்பட்டுள்ளது. இது இக்கோயிலின் பண்டையப் பெருமையைப் பறைசாற்றுகின்றது. மகா சிவராத்திரி காலத்தில் அடியார்கள் வெள்ளிக் குடங்களிற் பாலாவித் தீர்த்தத்தைத் தாமே கொண்டு வந்து இந்த பெருமானுக்கு அபிடேகஞ் செய்தல் கண்கொள்ளாக் காட்சியாகும். பாலாவியிலிருந்து தீர்த்தக் காவடியாகக் கொண்டு வரப்படுகின்ற தீர்த்தம் இதற்கே அபிடேகஞ் செய்யப்படுகின்றது.

இந்தியாவில் கங்கை, யமுனை, கோதாவரி, குமரித்துறை, சேது சமுத்திரம் போல் ஈழத்திருநாட்டில் பாலாவி தீர்த்தம் உள்ளது. இங்கு பிதிர்க்கடன் செய்வோர் காசி, காயா, காஞ்சி என்ற புண்ணிய சேத்திர வரிசையிற் காயாவிற் செய்த பலனைப் பெறுவர் என்பது சைவமரபு. ஆகவே இந்தத் தீர்த்தக் கரையில ஆடி அமாவாசையிலும், அந்தியேட்டித் தினங்களிலும் பலர் பிதிர்க்கடன் செய்கின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய கோயில்:- 19ம் நூற்றாண்டு மத்தியில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் இதயத்தில் திருக்கேதீச்சர எண்ணம் கருக்கொண்டது. நாவலர் அவர்கள் இக்கோயிலின் சிறப்பையும் அதனை மீண்டும் புனரமைக்க வேண்டிய அவசியத்தையும் சைவசமயிகளிடம் வலியுறுத்தி வந்தார். ஆனால் அன்று வாழ்ந்த சைவ மக்களின் ஐக்கக் குறைவும், கிறிஸ்தவர்களின் பலத்த எதிர்ப்பும் நாவலர் அவர்களின் முயற்சிக்கு உடனடியான பலனைத் தரவில்லை. அவரின் மறைவுக்குப்பின் 14 ஆண்டுகள் கழித்து அவருடைய கனவு நனவானது.

1893ம் ஆண்டில் திருக்கேதீச்சரம் இருந்தது எனக் கருதப்படும் இடமாகிய நாற்பது ஏக்கர் கொண்ட காணியை ஏலத்தில் சைவ மக்களும் நாட்டுக்கோட்டை நகரத்தாரான திரு. பழனியப்பச் செட்டியாரும் விலைக்கு வாங்கினர். பிறகு 1894ம் ஆண்டு ஆவணி மாதம் திருவாளர்கள் பழனியப்பச் செட்டியார், பசுபதிச் செட்டியார் ஆகியோரால் சிறு தலமாக அமைக்கப்பட்டது. பின்னர் 1908ம் ஆண்டில் கற்கோயில் கட்டப்பட்டு கும்பாபிஷேகம் நன்கு நடந்தேறியது.

1948ல் திருக்கேதீச்சரம் ஆலய புனருத்தாரண சபை சேர். கந்தையா வைத்தியநாதன் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டுத் திருப்பணிகள் பல காலத்திற்குக் காலம் மேற்கொள்ளப்பட்டன. 1976ல் மகாகும்பாபிஷேகம் வெகு சிறப்பாக நடைபெற்றது.

சிவமணி சேர் கந்தையா வைத்தியநாதன் இக்கோவிலுக்குச் செய்த பணிகள்:-

1. நித்திய பூசை திருமுறைகள் ஓதுதல்
2. காலையில் திருப்பள்ளி எழுச்சி ஓதுதல்
3. குருகுலம் நிறுவுதல்
4. குருகுல வெளியீடுகள்
5. திருமுறைகளில் நாயன்மார்களினால் கூறப்பட்ட அதே நிலையினை உருவாக்கியது.

1961ம் ஆண்டு கார்த்திகைத் திங்களில் சிவானந்த குருகுலம் தொடங்கப் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.
பல சைவசமய நூல்கள் குருகுல வெளியீடுகளாக வெளியிடப்பட்டுள்ளது. இதுவரை வெளிவந்தது :-

1. முத்திராலட்சணம்
2. சோபகிருது வருஷ நவராத்திரி, சிவராத்திரி விரத நிர்ணயம்
3. சிவராத்திரி மாச நிர்ணயம்
4. அக்கினி காரிய விதி (மூலமும் உரையும்)
5. சிவபூசை விளக்கம்

திருமுறைகளில் நாயன்மார்களினால் கூறப்பட்ட அதே நிலையினை உருவாக்கினார் என்பதற்கு உதாரணங்களாகக் கூறக் கூடியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ. "பாலாவியின் கரைமேல்" என்ற பாடலுக்கு இணங்க சேறும் சகதியும் நிறைந்த மண்மேடான பாலாவியை வெட்டி அணைகட்டி நீர் தேங்கியோடும் தீர்த்தமாக ஆக்கியது. இதற்கு நீர்ப்பாசனப் பொறியியலாளர் திரு.எஸ். ஆறுமுகம் அவர்களின் சேவை நம்மவர் நெஞ்சினில் என்றென்றும் நிலைத்து நிற்க வேண்டியது.

ஆ. "மஞ்ஞை நடமீடு மாதோட்டம்" என்ற பாடலுக்கு அமைய மயில் வளர்ப்பதை ஊக்குவித்து மஞ்ஞையை நடமீடச் செய்தது.

இ. "மாவின்கனி தூங்கிடும் பொழில் மாதோட்டம்" என்ற பாடலுக்கு அமைய மாமரங்கள் நாட்டியது ஆகியனவாகும்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகியன ஒருங்கிணைந்த இப்புனித ஸ்தலத்தில் ஸ்ரீகௌரி அம்பாளோடு கேதீஸ்வர நாதர் வீற்றிருந்து அருள்பாலிக்கின்றார். இந்த விக்கிரகங்கள் காசியிலிருந்து கொண்டுவரப்பட்டவையாகும். சுமார் நானூறு ஆண்டுகளுக்குப் பின் திருக்கேதீச்சரத் தலத்தில் அருளாட்சி புரிந்தருளும் பஞ்சமூர்த்திகளும், புதிய ஐந்து தேர்களில் பவனி வந்த கண்கொள்ளாக் காட்சி 17.6.01ல் தேர்த்திருவிழாவன்று இடம்பெற்றது.

இந்த ஆலயத்திற்கு சேரசோழபாண்டிய பல்லவ காலச் சிறப்புக்கள் உண்டு. இங்கு நடந்த அகழ்வாராய்ச்சியின் போது சோழர் காலத்திற்குரிய வேலைப்பாடமைந்த இலிங்கமொன்றும், வெண்கலத்திலான சோமாஸ்கந்த வடிவமும் கண்டெடுக்கப்பட்டது. கிட்டத்தட்ட ஆயிரம் வருடப்பழமை வாய்ந்தது. அதே ரீதியில் இப்போது புதிய சோமாஸ்கந்த விக்கிரகம் வார்க்கப்பட்டிருக்கின்றது. உலகிலேயே இதுவே மிகப்பெரிய சோமாஸ்கந்த மூர்த்தி எனக் கருதப்படுகின்றது.

இதுபோல கல்யாண சுந்தரர், பிஷாடனர், சந்திரசேகரர் ஆகிய மூர்த்திகளின் திருவுருவச் சிறப்பும் அளப்பரியது. பரிவார மூர்த்திகளாக புராதன மகாலிங்கம், விநாயகர், சுப்பிரமணியர், நடராசர், சண்டேஸ்வரர் ஆகியோர் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளார்கள். பிரதிஷ்டை செய்யப்பட்ட மகாலிங்கம் மிகவும் பழமையானது.

இங்கு தவறாது ஆறு கால நித்திய நைமித்திய பூசைகள் கிரமமாக நடைபெற்று வருகின்றன. இங்கு தினமும் காலையில் "கோ" பூசை நடைபெற்று வருகின்றது.

மாசி மாதத்து மகா சிவராத்திரி என்றதும் இன்று திருக்கேதீச்சர ஆலயமே நினைவிற்கு வருகின்றது. நான்கு யாமங்களிலும் சிறப்பாக நடக்கும் பூசையும் பல்லாயிரக்கணக்கான அடியவர்கள், பாவம் வினையறுக்கும் பாலாவியில் நீராடி இறைவனை வணங்கும் கோலமும் என்றும் அருள் சுரக்கும் கண்கொள்ளாக் காட்சிகள் ஆகும். பங்குனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தரத்திலும், பிற விசேட தினத்திலும் சிறப்பான பூசைகளும், திருவிழாக்களும் நடைபெறும். பிரதோஷத் திருவிழாவும் கொண்டாடப்படுகின்றது.

தீர்த்தோற்சவம் வைகாசி விசாகத் தினத்தன்று இடம்பெறக் கூடியதாகப் பத்து தினங்களுக்கு வருட உற்சவம் நடைபெறுகின்றது. தீர்த்தோற்சவம் பாலாவித் தீர்த்தத்தில் இடம்பெறும். 6 ம் நாள் கலை அம்சம் மிக்க பிச்சாடனமூர்த்தி பிச்சையெடுக்க எழுந்தருளுங் காட்சி காண்பதற்கரியது. 7 ம் நாள் திருக்கல்யாண விழாவிலே திருக்கேதீச்சரநாதர் கௌரி அம்பாள் சமேதரராய் மங்களக் கோலத்திற் காட்சி தந்தருளுவர். பக்தோற்சவம் 8 ம் நாள் திருவிழாவாகும். 9 ம் நாள் தேர்த் திருவிழா ஐந்து தேர்கள் இழுக்கப்படும். உற்சவம் முடிந்த மறுநாள் மௌன உற்சவம் நடைபெறும். இது மற்ற கோயில்களிற் காணமுடியாத அற்புதமான உற்சவமாகும்.

ஆலய உற்சவங்களிற் பாடசாலைப் பிள்ளைகள் பங்குகொண்டு நடத்துவதைச் சிறப்பாகக் குறிப்பிடல் வேண்டும். இப்பொழுது திருக்கேதீச்சர யாத்திரை செய்யும் அடியவர்கள் தங்குதற்கெனத் திருஞானசம்பந்தர் மடம், சுந்தரர் மடம், திருவாசக மடம், நாவலர் மடம், சிவராத்திரி மடம், கதிர்காம யாத்திரிகர் தொண்டர் மடம் முதலியனவும் அமைக்கப்பட்டுள்ளன.

இராச கோபுரம், திருமதில் என்பவற்றின் திருப்பணிகள் நடைபெற்றன. சுத்தமான வெண்கலத்தாலும், தகரத்தாலும் கலந்து செய்யப் பெற்ற மணி ஒன்று லண்டனிலுள்ள பிரபலமான வார்ப்புத் தொழிற்சாலையில் செய்யப்பட்டு மணிக்கூட்டுக் கோபுரத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இந்த மணியோசை மன்னாரப் பகுதியைச் சுற்றி பலமைல் தூரத்துக்கு கேட்கும்.

இத்துடன் எளிதாக போக்குவரத்து செய்வதற்கான தார் இட்ட வீதி, குழாய்த் தண்ணீர் வசதி, ஒழுங்கான பஸ் போக்குவரத்து, கடைகளும் தொலைபேசியோடு கூடிய தபாலகம், மின்சார வசதி என்பனவும் செய்யப்பட்டுள்ளன.

சைவ சமயத்தின், தமிழ் பண்பாட்டின், தமிழ் மொழியின் உறைவிடமாக திருக்கேதீச்சரம் மன்னாரில் எழுந்து நிக்கின்றது. இங்கே அம்மையப்பராக அமர்ந்து இன்னருள் புரிகின்றார். இந்த இறைவனை வாழ்வில் மறவாது வழிபட வேண்டியது ஒவ்வொரு சைவர்களதும் கடமையாகும்.

தக்ஷிண கைலாச மான்மியம் திருக்கேதீஸ்வரத்தல வரலாற்றுச் சிறப்பினைச் சிறப்புறக் கூறுகிறது. மஹாவம்சம், யாழ்ப்பாண வைபவமாலை, மாந்தைப் பள்ளு ஆகிய நூல்களில் இச் சிவாலயத்தைப் பற்றிய குறிப்புக்கள் உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கேதீச்சரநாதன் திருப்பதிகம். திருக்கேதீச்சரநாதர் கிள்ளைவிடு தூது. திருக்கேதீச்சரநாதன் ஊஞ்சல். திருக்கேதீச்சரப் புராணம். திருக்கேதீச்சரத்துக் கௌரி நாயகி பிள்ளைத் தமிழ் முதலியவை இக்கோயில் மீது பிற்காலத்தில் எழுந்த செய்யுள் இலக்கியங்களாகும்.

திருக்கேதீச்சரத்தின் இவ்வளவு சிறப்பும் வட கிழக்கில் யுத்தம் தொடங்குவதற்கு முன் இருந்தவை. யுத்தம் காரணமாக இத்தலம் தன் சிறப்பு எல்லாவற்றையும் இழந்து பல சேதத்துக்கு உள்ளாகி காடாகி காட்சி அளிக்கின்றது. இதில் இருந்தே எங்கள் எல்லோருக்கும் ஒரு விடயம் தெள்ளத் தெளிவாக தெரிகின்றது. அது ஈழத்து இந்து மக்களின் உயர்ச்சி, தாழ்வோடு இதன் எழுச்சியும் வீழ்ச்சியும் பின்னிப் பிணைந்துள்ளது. இத்தலம் மறுபடியும் புனருத்தாரண பணியை எதிர்நோக்கி நிற்கின்றது.

3 வருடங்களுக்கு முன் திருக்கேதீச்சரம் ஆலய புனருத்தாரண சபை பூசை வழிபாட்டுக்கு ஒழுங்கு செய்து நடைபெறுகின்றது. புனருத்தாரணத்துக்கு இந்த சபை தங்கள் முயற்சியை ஆரம்பித்து உள்ளார்கள். அது இனிதே நிறைவேறி பழையபடி நாட்டிலுள்ள இந்து மக்கள் எல்லாம் தங்கு தடையின்றி திருக்கேதீச்சர நாதனை வழிபாடு செய்ய வேண்டும் என்று திருக்கேதீச்சர நாதனை வேண்டி நிற்கின்றோம்.

தொகுப்பு
திருமதி. விமலா மணிவாசகன்.

---

நன்றி:- இந்து சமய திணைக்களத்தின் வெளியீடான சிவராத்திரி சிறப்பு, பிரதேச அபிவிருத்தி இந்து கலாசார அமைச்சு வெளியீடான இலங்கைத் திருநாட்டின் இந்துக்கோயில்கள், அகில இலங்கை இந்து மாமன்றம கட்டிட பூர்த்தி சிறப்பு மலர். ஆண்டு 10 சைவநெறி. புதின பத்திரிகைகள்.

பூதியணி பொன்னிறத்தர் பூண நூலர்
பொங்கரவர் சங்கரர் வெண்குழையோர் காதர்
கேதிச்சரமேவினார் கேதாரத்தார்
கெடில வடவதிகை வீரட்டத்தார்
மாதுயரந் தீர்த்தென்னை யுய்யக் கொண்டார்
மழபாடிமேய மழுவாளனார்
வேதி குடியுள்ளார் மீயச் சூரார்
வீழி மிழலையே மேவினாரே.

— திருநாவுக்கரசர் நாயனார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம் |
|---|---|
| | திருக்கேதீச்சரப் பதிகம் |
| **இறைவன்:** | கேதீச்சரநாதர் **இறைவி:** கௌரியம்பாள் |
| **தீர்த்தம்:** | பாலாவி **ஏழாம் திருமுறை** |

பண்:- நட்டபாடை ராகம்:- கம்பீரநாட்டை தாளம்:- ரூபகம்

திருச்சிற்றம்பலம்

**நத்தார்படை ஞானன்பசு வேறிந்நனை கவிழ்வாய்**
**மத்தம்மத யானையுரி போர்த்தமணை வாளன்**
**பத்தாகிய தொண்டர்தொழு பாலாவியின் கரைமேல்**
**செத்தாரெலும் பணிவான்திருக் கேதீச்சரத் தானே.** 1

*பொழிப்பு*

விட்டுணுவை இடப வாகனமாக்கிக் கொண்டவர்,யானைத்தோல் போர்த்த மங்கல நாயகர், கபாலதாரி ஆகிய சிவபிரான் மெய்யன்பாகள் புண்ணியத்தைப் பெறும் வண்ணம் பாலாவியின் கரையிலுள்ள திருக்கேதீச்சரத்தில் எழுந்தருளியுள்ளார்

**சுடுவார்பொடி நீறுந்நல்ல துண்டப்பிறை கீளும்**
**கடமார்களி யானையுரி யணிந்தகறைக் கண்டன்**
**படவேரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேல்**
**திடமாயுறை கின்றான்திருக் கேதீச்சரத் தானே.** 2

*பொழிப்பு*

நீறு, பிறைச்சந்திரன், கிழிக்கப்பட்ட சீலையைக் கச்சையாய் அமைந்த கீழுடை, யானைத் தோல் என்பவற்றைத் தரித்த நீலகண்டப் பெருமான், பாலாவியின் கரைமீதுள்ள திருக்கேதீச்சரத்தில் கௌரிநாதனாக உறைகின்றான்

**அங்கம்மொழி யன்னாரவர் அமரர்தொழ தேத்த**
**வங்கம்மலி கின்றகடல் மாதோட்டநன் னகரிற்**
**பங்கம்செய்த பிறைசூடினன் பாலாவியின் கரைமேற்**
**செங்கண்ணர வசைத்தான்திருக் கேதீச்சரத் தானே.** 3

*பொழிப்பு*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதத்தின் அங்கங்களை ஓதுகின்ற பிராமணாகளும் அவர்களைப் போன்றோரும் தேவர்களும் துதிக்கும், பிறை சூடிய பாம்பை ஆபரணமாகக் கொண்ட சிவபெருமான் மாதோட்டத்தில் பாலாவி நதிக் கரையிலுள்ள திருக்கேதீச்சரத்தில் அமர்ந்துள்ளார்.

கரியகறைக் கண்டன்ந(ல்)ல கண்மேல்ஒரு கண்ணான்
வரியசிறை வண்டியாழ்செயு(ம்) மாதோட்டநன் னகருட்
பரியதிரை யெறியாவரு பாலாவியின் கரைமேல்
தெரியுமறை வல்லான்திருக் கேதீச்சரத் தானே. 4

*பொழிப்பு*

கருநீல கண்டனும், முக்கண்ணனும், வேத வித்தகனும் ஆகிய சிவபிரான் சோலைகள் நிறைந்த மாதோட்டத்தில் பேரலைகள் வீசும் பெருநதியான பாலாவியின் கரையிலே திருக்கேதீச்சரத்தில் குடிகொண்டுள்ளார்.

அங்கத்துறு நோய்கள்ளடி யார்மேலொழித் தருளி
வங்கம்மலி கின்றகடல் மாதோட்டநன் னகரில்
பங்கஞ்செய்த மடவாளொடு பாலாவியின் கரைமேல்
தெங்கம்பொழில் சூழ்ந்ததிருக் கேதீச்சரத் தானே. 5

*பொழிப்பு*

அடியார்களின் நோய்ப்பிடைகளை நீக்கி, அருள் பாலிக்கும் அரன் கடல் சூழ் மாதோட்ட நகரிலுள்ள பாலாவி என்னும் நதிதீர்த்தில் தென்னஞ் சோலைகளின் நடுவில் அமைந்துள்ள திருக்கேதீச்சரத்தில் கௌரியம்பாளோடு உடனுறையும் சிவநாயகராக எழுந்தருளியுள்ளார்.

வெய்யவினை யாயவடி யார்மேலொழித் தருளி
வையம்மலி கின்றகடல் மாதோட்டநன் னகரில்
பையேரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேல்
செய்யசடை முடியான்திருக் கேதீச்சரத் தானே. 6

*பொழிப்பு*

சடாதாரியான சிவபிரான் தம் அடியவர்களின் பாவங்களை ஒழித்தருளி, மாதோட்ட நகரில் பாலாவியின் கரையில் உள்ள திருக்கேதீச்சரத்தில் கௌரியம்பாளுடன் உறைகின்றார்

ஊனத்துறு நோய்களடி யார்மேலொழித் தருளி
வானத்துறு மலியுங்கடல் மாதோட்டநன் னகரில்
பானத்துறு மொழியாளொடு பாலாவியின் கரைமேல்
ஏனத்தெயி றணிந்தான்திருக் கேதீச்சரத் தானே. 7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பொழிப்பு*

நோய் தீர்க்கும் வைத்தியநாதரான சிவபிரான், கடல்படு திரவிய வளமுள்ள மாதோட்டத்தில் பாலாவியின் கரையில் அமைந்துள்ள திருக்கேதீச்சரத்தில் கௌரியம்பாளுடன் அமர்ந்துள்ளார்.

**அட்டன்னழ காகஅரை தன்மேலர வார்த்து**
**மட்டுண்டுவண் டாலும்பொழில் மாதோட்ட நன்னகரில்**
**பட்டவரி நுதலாளொடு பாலாவியின் கரைமேல்**
**சிட்டன்நமை யாள்வான்திருக் கேதீச்சரத் தானே.** 8

*பொழிப்பு*

பரம்பொருள், நம் நாயகன், எண் வடிவங்கள் தாங்கும் ஈசுவரன் ஆகிய சிவபிரான், மாதோட்டத்தில் பாலாவி நதிதீரத்தில் அமைந்துள்ள திருக்கேதீச்சரத்தில் நுதலழகியான கௌரியம்பாளுடன் எழுந்தருளியுள்ளார்.

**மூவரென இருவரென முக்கணுடை மூர்த்தி**
**மாவின்கனி தூங்கும்பொழில் மாதோட்டநன் னகரில்**
**பாவம்வினை யறுப்பார்பயில் பாலாவியின் கரைமேல்**
**தேவனெனை யாள்வான்திருக் கேதீச்சரத் தானே.** 9

*பொழிப்பு*

மகாதேவன், அருளாளன், முத்தொழில் புரிபவன், சிவசக்தி வடிவினன், முக்கண்ணன் ஆகிய சிவபிரான் மாதோட்டத்திலே பாலாவியின் கரையிலுள்ள திருக்கேதீச்சரத்தில் உறைகின்றார்.

**கறையார்கடல் சூழ்ந்தகழி மாதோட்டநன் னகருள்**
**சிறையார்பொழில் வண்டியாழ்செயுங் கேதீச்சரத் தானை**
**மறையார்புக ழூரன்னடித் தொண்டன்னுரை செய்த**
**குறையாத்தமிழ் பத்தும்சொலக் கூடாகொடு வினையே.** 10

*பொழிப்பு*

உப்பங்கழிகளுள்ள மாதோட்டத்தில் சோலைகள் சூழ் திருக்கேதீச்சரத்தில் உறையும் ஈசன்மீது ஆருரன் என்னும் அடியார்க்கு அடியவன் பாடிய பதிகத்தை மெய்யன்புடன் ஓதுபவர்களைக் கொடிய வினைப்பயன்கள் சாரமாட்டா.

திருச்சிற்றம்பலம்

---

நன்றி:- ஆண்டு 10 சைவநெறி புத்தகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கன்ரபரி தமிழ்ச் சங்கம்

நியூசிலாந்து கன்ரபரி தமிழ்ச் சங்கத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது. அதன் நடப்பு வருட உத்தியோகத்தர்கள்

தலைவர் – S. ரவீந்திரன்

உபதலைவர் – S. செந்தில்மோகன்

செயலாளர் – வை. இரகுநாதன்

பொருளாளர் – V. ரவீந்திரன்

1996 ல் ஆரம்பிக்கப் பெற்ற கன்ரபரி தமிழ்ச் சங்கத்திற்கு ஆறு ஆண்டுகள் பூர்த்தி ஆகி உள்ளது. நியூசிலாந்தின் தென்தீவின் பிரதானநகராகிய CHRIST CHURCH ல்வாழும் இலங்கைத் தமிழர்களால், அவர்களது நலன் கருதியும், இலங்கைத் தமிழர் நலங்கள் கருதியும் இச்சங்கம் உருவாக்கப்பட்டது.

இதன் பிதான நோக்கங்கள் இரண்டு.

முதலாவது:– இங்கு வாழும் இலங்கைத் தமிழர்களிடையே அவர்களுடைய கலை, கலாச்சாரம், பண்பாடு, விளையாட்டு போன்ற பாரம்பரியங்களைப் பேணி வளர்ப்பது.

இரண்டாவது:– இலங்கைத் தமிழர்களின் இன்னல்களையும், பிரச்சனைகளையும் வெளி உலகிற்கு அறியச் செய்து, ஏனைய இதே போன்று செயற்படும் சங்கங்களுடன் ஒத்துழைப்பது. இச் சங்கம் நியூசிலாந்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கன்ரபரி தமிழ்ச் சங்கம் வெலிங்டன், அக்லாந்து நகர்களில் உள்ள தமிழ்ச் சங்கங்களுடன் இணைந்து ஒரு கூட்டமைப்பிலும் உள்ளது. இவை தமிழர்களின் பாரம்பரியங்களைப் பேணுவதுடன், இலங்கைத் தமிழர்களின் இன்னல்கள், பிரச்சனைகள் சம்பந்தமாகவும் பல முறை குரல் கொடுத்து வந்துள்ளன.

கலாச்சாரரீதியாக வருடத்தில் ஆறு நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெறும்.

1 தமிழ் வருடப் பிறப்பு விழா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

௨. குளிர் காலத்தின் நடுப்பகுதியில் நடைபெறும் விழா.
3. நவராத்திரி விழா.
4. தீபாவளிப் பண்டிகை விழா.
5. கிறிஸ்மஸ் பண்டிகையை ஒட்டி ஓர் PICNIC.
6. தைப் பொங்கல் விழா.

தைப் பொங்கல் விழாவின் போது சங்கத்தின் மலர் வெளியிடப்படும். இவ் ஒன்று கூடல்களில் அனைவரும் தவறாது பங்கு பற்றுவர்.

இவ்விழாக்களில் இச்சங்கம் நடாத்தும் தமிழ் வகுப்பில் பயிலும் மாணவ மாணவிகள் பல்வேறு கலை நிகழ்ச்சிகளை நடாத்திப் பெற்றோரையும், பார்வையாளர்களையும் மகிழ்விப்பர். இவர்களைத் தவிரப் பல்வேறு துறைகளிலும் திறமை பெற்றவர்கள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தித் தாங்களும் மகிழ்ந்து மற்றவர்களையும் மகிழ்விப்பர்.

இச்சங்கம் நடாத்தும் மிகச் சிறந்த பணி தமிழ்ப் பிள்ளைகட்குத் தமிழ் அறிவை வளர்ப்பதாகும். அதற்குத் தமிழ் வகுப்பு ஒன்றினை நடாத்தி வருகின்றனர். பொருள் தேடவும், புலம் பெயர்ந்தும் இங்கு வந்தவர்கள் தங்கள் பிள்ளைகள் தாய் மொழியைப் பிழைகள் இன்றிப் பேசவும், எழுதவும் தெரிந்து வைத்திருக்க வேண்டும் என்ற பெரு விருப்பு காரணமாக இப்பணியை மேற் கொண்டுள்ளனர். பெற்றோர் ஊக்கத்தினால் மாணவர்கள் ஊக்கமாகப் பங்கு பற்றிப் பயன் அடைந்து வருகின்றனர்.

புதிய நிர்வாகிகளின் ஊக்கம் காரணமாக, மேலும் பல துறைகளில் பணிகள் விரிவடைந்து இச்சங்கம் வெற்றி நடைபோடும் என எதிர்பார்க்கலாம்.

திரு. வை. இரகுநாதன்.

வாழிய செந்தமிழ்
வாழ்க நற்றமிழர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கங்கள்

## யாழ்ப்பாணம்

எங்கள் கல்லூரி 1993ஆம் ஆண்டு பொன்விழாவைக் கொண்டாடியபோது அதில் இச்சங்கம் முன்நின்று செயற்பட்டது. தற்சமயம் இச்சங்கத்தை மறுசீரமைக்க வேண்டிய அத்தியாவசியத் தேவை இருக்கின்றது. எங்கள் கல்லூரி நடுத்தோட்ட இராஜவரோதயப்பிள்ளையார் அருளால் இது கூடிய விரைவில் கைகூடும் என நம்புகின்றோம்.

## கொழும்பு

1993ஆம் ஆண்டு எங்கள் கல்லூரி பொன்விழாவைக் கொண்டாடியபோது இச்சங்கம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. அங்குரார்ப்பணக் கூட்டம் 21/08/1993 நடைபெற்றது. இச்சங்கம் வருடந்தோறும் யாழ்நாதம் என்னும் சஞ்சிகையை வெளியிட்டு வருகின்றது. 1995ஆம் ஆண்டு இதழ் 1 வெளியிடப்பட்டது. அத்துடன் ஆண்டுதோறும் கல்லூரியுடன் தொடர்பு கொண்டு அதன்தேவை அறிந்து இயலுமானவரை அவற்றை வழங்கி வருகின்றது. விபரங்கள் யாழ்நாதம் சஞ்சிகையில் வெளியிடப்படுகின்றன.

## சிட்னி - அவுஸ்திரேலியா

இச்சங்கம் மிகவும் சுறுசுறுப்புடன் இயங்கி வருகின்றது. கல்லூரிக்கு இரண்டு கணனிகள் வாங்குவதற்குத் தேவையான பணத்தை சென்ற ஆண்டு அனுப்பியுள்ளது. இதன் 10ஆம் ஆண்டு நிறைவையொட்டி கல்லூரிப் புலமைப் பரிசில் நிதியத்திற்கென 7.9.2002 'மலரும் மாலை' என்னும் பல்சுவை நிகழ்ச்சியை நடத்த உள்ளது.

## மெல்பேன் (Melbourne) – அவுஸ்திரேலியா

இச்சங்கத்துடன் தொடர்புகொள்ள முடியவில்லை.

## கனடா

2000ஆம் ஆண்டு ஊக்கமுள்ள இச்சங்கம் சக்திவிழாவை மிகவும் கோலாகலமாகக் கொண்டாடியது. கல்லூரிக்குத் தேவையறிந்து உதவுமாறு ரூபா 364,000/- கொழும்புச் சங்கத்திற்கு அனுப்பியுள்ளது. இப்பணத்தைக் கொழும்புச் சங்கம் திறைசேரி உண்டியலில் தற்காலிகமாக போட்டுள்ளது.

## ஐக்கிய இராச்சியம் (UK)

இச்சங்கம் விளையாட்டுத்துறையில் ஈடுபட்டு அங்குள்ள பழைய மாணவிகளிடையான உறவைப்பேணி வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலிவு விற்பனையில் ...



பிரதம அதிதி திருமதி உமாராணி குமாரசுவாமி அவர்களை தலைவி செல்வி சற்சொரூபவதி நாதன் அவர்கள் அறிமுகம் செய்து சொற்பொழிவு ஆற்றுகின்றார்.



பிரதம அதிதி திருமதி உமாராணி குமாரசுவாமி அவர்களை பொருளாளர் திருமதி அபிராமி கயிலாசபிள்ளை அவர்கள் பழத்தட்டுக் கொடுத்து வரவேற்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

PRINTED BY UNIE ARTS (PVT) LTD., COLOMBO 13. TEL: 330195.